Reg. M. 2330

CONNEMARA PUBLIC LIBRARY
18 JUL 1955
MADRAS

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன்னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு

மலர் 26 | நந்தன பங்குனி 1953 மார்ச் | இதழ் 3

நாட்டு ஒலி

1. படிப்பின்மையால் தீயகுணம் ஏற்படுகிறதா?

அண்மையிலே ஆங்கில நாட்டில் 16 வயதுள்ள ஓர் இளைஞன் ஒரு காவல் சேவகனைச் சுட்டுக் கொன்று விட்டான். இதனைக் குறித்து எழுதிய ஆங்கிலச் செய்தித்தாள் தற்காலத்தில் படிப்பும் பண்பாடும் ஓங்கியிருக்கவும், ஆங்கில நாட்டில் இத்தகைய தீய செயல்கள் இளைஞரால் ஏன் இயற்றப்படுகின்றன என்ற கேள்விகேட்டு அத்தீமை இளைய உள்ளங்களில் என்னத்தினால் பாவுகின்றது என்று கூறிச் சில கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றது. அவற்றைச் சுருக்கமாகக் கூறுவோம்.

'ஆங்கிலப் பொதுமக்கள் இதுவரை கண்டும், கேட்டும் இராத ஒருவகை நிலை தற்போது நம்மிடை இருப்பதை அறியவேண்டும். அது என்னவெனில் துட்ட இளைஞனின் பயங்கரச் செய்கை. அதனைத் தீமைவிளைக்கும் இளமைக் கேள்வி என்பார்கள்.

இக்குழந்தைகளில் இயல்பாகவே கெட்ட குணம் படிந்திருக்கிறது என்று கூறவேண்டாம். ஏனெனில் அந்நிலை இயற்கைக்கு மாறானது. இளமை உள்ளம் தூய்மையானது. அது பிறரால் கேடு அடையும் மட்டும் தூய்மையாகவே இருக்கும். அது கேடு அடைந்தது என்றால் அப்பழி வயது வந்தவர்களுடையதே ஆகும்.

இதைப்பற்றி ஆராயும்போது, படிப்பின்மை என்ற கருத்தே நம்முன் நிற்கும். அது சரிதான் என்றும் கூற லாம். ஆனால் படிப்பின்மை என்றால் தீமையின் உருவம் என்று கருதக்கூடாது. உலகில் கணக்கற்ற மக்கள் எழுத வும் படிக்கவும் தெரியாதிருந்தும், உயர்ந்த குணத்தவராக இருக்கிறார்கள். படிப்பு என்றது தற்கால விளைவே ஆம். 1870-ல் தான் கட்டாயக் கல்வித்திட்டம் ஏற்படுத்தப்பட் டது. அதற்குமுன் ஆங்கில நாடு குற்றம் பெருகிய நாடாக இருக்கவில்லை.

ஆங்கில மக்கள் தற்போது இருப்பதைக் காட்டிலும் முன்னாளில் நன்னடத்தையும், கடவுள் கொள்கையும் கொண்டிருந்தார்கள் என்று கூறப்போதுமான சான்றுகள் இருக்கின்றன. தற்போது எல்லா மக்களுக்கும் படிப் பின் பயனை ஊட்டினதினால் முன் இருந்த நற்குணத்தை ஒழித்துவிட்டோம் என்று கூறமுடியுமா?

இந்த இருபதாம் நூற்றாண்டின் இடையில் வசிக்கும் நாம் இந்தக் கேள்வியைக் கேட்டு அதற்குத்தக்க ஒரு விடை யும் தரக் கடமைப்பட்டுள்ளோம். அதைக்கொண்டு நமது மக்களின் எதிர்கால வாழ்க்கைக்கு ஒரு திட்டம் வகுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு சிறிது பண்பாட் டறிவை ஊட்டினதினாலே பெரிதாக விளங்கியிருந்த நன்னம் பிக்கையை நீக்கிவிட்டோமா?

அப்படித்தான் தோன்றுகிறது. நமது முன்னோர் களின் உறுதியான நம்பிக்கையும் தொலைந்துபோய் அதற்கு மாறாக ஒரு சூன்ய நிலைதான் காண்கிறோம். ஆன்மா இல்லை, ஆன்மீகம் இல்லை என்ற வகையில் நம்பிக்கை இன்மையே பெருகி ஒழுக்கம் குன்றி இருப்பதையே காண்கிறோம்.

பருப்பொருளுக்கே மதிப்பு தருதலால் ஆன்மீகத்தில் குறைந்துவருகின்றோம். நல்லுரிமை அரசு அற்புதமானது தான். ஆனால் அதன் கடமைகளை எண்ணாது உரிமைகளையே வற்புறுத்திவருகிறோம்.

இந்த எண்ணங்களை நாம் மறந்து வருகிறபடியால், நம் மிடை தீய இளைஞர்கள் தோன்றுகிறார்கள்.

அவர்களுடைய நிலைமை வறுமையினால் ஏற்பட்டதல்ல. அவர்களின் பெற்றோர்கள் சமயப்படிப்பு பெறாமல் தாழ்ந்த நிலையில் வாழ்வதுவே தகுந்த காரணம் என்க. பாடசாலைகளில் சமயம் போதிக்கப்படுகிறதா? வெகு குறைவே.

வேடிக்கைப் படங்களும், திரைப் படங்களும் இளைஞர்கள் உள்ளங்களைக் கெடுக்கின்றன என்று நாம் நம்புவதில்லை. நமது பிள்ளைகள் பல நூற்றாண்டுகளாகத் துட்டுவிலைப் பயங்கர நவீனங்களைப் படித்துக்கொண்டுதான் வருகிறார்கள். ஆனால் அவர்கள் இந்தவகைப் பயங்கரச் செயல்களைச் செய்வதில்லை. ஏனெனில் அவர்களை நடு நிலைமையில் இருத்திவைக்க நல்ல போதனை இருந்தது.

அது என்னவெனில் வீடு, பள்ளி, கோயில் இவைகளில் இளைஞர்களுக்கு நல்ல தூண்டுகோல் இருந்தது. போதாதற்கு பிரம்புப்பயமும் இருந்தது. இந்தப் பழமையான எளிய பழக்கங்களை நாம் மீண்டும் கைக்கொண்டால், துட்டப்பிள்ளைகள் மறைந்து போவார்கள் என்பது திண்ணம்.'

இவ்வாறு ஒரு புகழ்பெற்ற ஆங்கில தினத்தாள் கூறுகின்றது. இதனை எடுத்து விரித்து மற்றொரு ஆங்கில மாசிகை இக்கொள்கையை மறுத்து எழுதியிருக்கிறது. அதனை இனி விளக்குவோம்.

2. வேறொரு கருத்து:—'மேலே கூறிய தினத்தாள் தான் எடுத்துக்கொண்ட ஆராய்ச்சியில், செயல் முடிபுகள், அல்லது காரியங்களைக் கூறிப் பின் செயல் முறைகளை அல்லது இரண்டாவதான தக்க காரணங்களை விளக்குகின்றதே ஒழிய அடிப்படைக் காரணங்களை எடுத்துக்கூறவில்லை. சில வெளிப்படையான காட்சிகளை அத்தாள் ஆராயவேயில்லை. சில குழந்தைகள் தங்களை ஈன்றெடுத்து வளர்த்தின பெற்றோர்களைக் காட்டிலும், குணம், உணர்ச்சி, விருப்பம், வெறுப்பம் இவைகளில் முற்றும் மாறுபட்டிருப்பதைப் பார்க்கிறோம். மேலும் ஒரே நிலையில் உள்ள பெற்றோர்களுக்குப் பல குழந்தைகள் பிறக்க அவர்கள் எல்லாரும் ஒரே சூழ் நிலையில் வளர்த்தப்பட்டிருந்தும் ஒருவருக்

கொருவர் முற்றும் மாறுபட்ட குணங்களையும், செயல்களையும், நடவடிக்கைகளும் கொண்டிருக்கிறதை நேரில் அறிகிறோம்.

அப்படி இருக்க இந்த மாறுபாடுகளுக்குக் காரணம் என்ன? போதனை, நல்ல சூழ்நிலை, சமயப்படிப்பு, பிரம்படி இவைகள் போதுமா? இவர்களை ஒழுங்குபடுத்த வேண்டுமாகில் அல்லது அடிப்படைக் காரணம் வேறொன்று இருக்கிறது என்று தோன்றவில்லையா?

இந்த வேறுபாடுகள் தாமே தோன்றுவதில்லை. சூழ்நிலைகள் இவற்றைப் பெருக்குவதில்லை. இவைகளை எளிதில் மாற்றுவது கடினம். "தீமை" என்ற பிரச்சினை உலகில் உண்டு. அதன் காரியங்கள்தான் இந்த வேறுபாடுகள். அதனை நடத்திவைப்பது ஓர் உன்னதமான திட்டம். அத் திட்டம் பிரபஞ்சத்திற்கே ஏற்பட்டிருப்பது. அந்த மகத்தான திட்டத்தை அறியவேண்டும். அதை அறியாவிடின் இந்த வேறுபாடுகளுக்கு ஒரு தீர்வு காணமுடியாது. அதை அறிந்தால்தான் உலகத்தில் வேறுபாடுகளை நீக்கி நல்ல ஒழுக்கமுறை கொண்டுவரமுடியும்.'

இந்தக் கருத்தை மேலே கூறிய மாசிகை வெளியிட்டிருக்கிறது. அதை ஒட்டி வேறு சிலவற்றையும் கூறுகின்றது. அவற்றையும் சற்று விளக்குவோம்.

3. திட்டங்கள் :—தற்காலத்தில் உலகில் எங்கு பார்த்தாலும் குழப்பமும் கோளாறுமாக இருக்கின்றன. இவற்றை எல்லாம் சமாளித்து ஓர் அமைதியை நிறுவ அறிஞர்கள் முயலுகின்றனர். அதற்காக ஒவ்வொரு நாகரீக நாடுகளிலும் சில திட்டங்களை ஆராய்ந்து அவற்றை நிறைவேற்ற எண்ணுகின்றார்கள். இந்தியாவில் ஐந்து வருடத் திட்டம் சர்வதேச சங்கத்தில் சாசன முயற்சிகள், முதலியவைகளை இயற்றிச் சிக்கனம், பொருளமைப்பு, அரசியல், கல்வி நிலை, சமூக ஒழுங்கு இவைகளை நன்கு செய்யத் தீர்வு காண வழிதேடுகிறார்கள். இவைகளை ஆராய்ச்சி செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் அறிஞர்கள் நிபுணர்களே ஆவர். எனினும் நமது நிலவுலகமோ, அதனினும் மேலான ஞாயிறு மண்டலமோ இவைகளின் அடிப்படைத் திட்டத்தை அறிந்து

தங்கள் திட்டங்களை அடிகோலுகிறார்களா என்பது கேள்வி? இல்லாவிடில் இவர்களுடைய திட்டங்கள் எல்லாம் வெறும் குழப்பங்களாக முடியும்.

உதாரணமாக நடப்பவற்றை ஆராய்ந்து பாருங்கள். ஒவ்வொருவர் திட்டத்திற்கும் வேற்றுமை உண்டு. ஒவ்வொருவருடைய குறிக்கோள் அல்லது இலட்சியம் வேறு. ஒன்றை ஒன்று அடித்துக்கொள்கிறது. முரண்பாட்டிற்கு அளவில்லை. இறுதியில் ஒன்றை ஒன்று அழித்துவிடுகிறது. ஆகவே இப்படிப்பட்ட திட்டங்களினால் பயன் என்ன? உலகின் அடிப்படை நோக்கம் அறிந்து அந்த உன்னதமான திட்டம் ஒன்றே உலகின் முன்னேற்றத்திற்காக ஏற்பட்டது என்று உணர்ந்து அதன்படி தங்கள் சிறுசிறு திட்டங்களை வகுத்தால்தான் அவைகள் வெற்றியடையக்கூடும்.

4. உன்னத திட்டம்:—இவ்வாறு கூறும் உன்னத திட்டத்தைப்பற்றி இரண்டு கேள்விகள் தோன்றும். (1) உன்னத திட்டம் (Master Plan) ஒன்று உண்டா? (2) அதன் உண்மையை கூடியவரையில் அறியக்கூடுமா? இந்த இரண்டு கேள்விகளுக்கும் திண்மையான விடைகள் உண்டு. திட்டமும் உண்டு. அதனை அறியவும் கூடும் என்பதே விடைகள்.

பண்டைய நாளிலிருந்து உலகில் தோன்றிய சமயப் பெரியார்கள் இந்தத் திட்டத்தை அறிந்து வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் எழுதியும் வைத்திருக்கிறார்கள். ஆனால் இவைகள் நம்பிக்கை என்ற திரைக்குமுன் மறைந்திருக்கின்றன. நேரில் காட்டு என்றால் அது ஆகிறதில்லை என்றாலும் அறியமுடியும். நூல்களிலோ, கதைகள், உவமைகள், குறிகள் இவைகளின் மூலமே காட்டப்படுகின்றன.

"பூதங்கள் தோறும் நின்றாய் எனின் அல்லால்
போக்கிலன் வாவிலன் என நினைப்புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக்கண்டறி வாரை"

என்று மணிவாசகனாரும் கூறியிருக்கின்றார். அல்லவா?

அதுபோலவே இந்த உன்னதத் திட்டமும் உலகில் இருக்கிற தென்று கூறலாம் அல்லவா ?

உலகத்திலே நிபந்தனைச் சட்டம் அல்லது விதி என்பது ஒன்று உண்டு. (Law of condit ons) அது தவறுதல் இல்லை. எந்த செயல் நடந்தபோதிலும் அச்செயலுக்குரிய நிபந்தனைகள் நிகழ்ந்தால்தான் அந்தச் செயல் நடைபெறும். இந்த நிபந்தனைகள் நமது நிலவுலகத்தில் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. இந்த நிபந்தனைச் சட்டத்திற்கும் உன்னதத்திட்டத்திற்கும் ஒற்றுமை உண்டு. சம்பந்தம் உண்டு. இந்த உன்னதத் திட்டத்தை நாம் அறிய வாய்ப்பு உண்டு.

5. அத்திட்டத்தின் ஏழு கூறுகள்:—அத்திட்டம் ஏழு தன்மைகளைக் கொண்டிருக்கின்றது. அவைகளைக் குறிப்போம்.

1. இம்மை, மறுமை, வீடு என்ற மூவுலகிலும் தாது, தாவரம், உயிர் வர்க்கங்கள் எல்லாம் ஞாயிறு மண்டலம் உட்பட ஆண், பெண், மக்களின் பொருட்டே இருக்கின்றன. எதிரிடையாக மக்கள் அவ்வர்க்கங்களுக்காக இல்லை. ஆண், பெண் என்ற இரட்டைத் தன்மை உலக அற்புதமாகும். இதுவே எல்லாக் கொள்கைகளுக்கும் இயல்பானதும் அடிப்படையானதுமாகும்.

2. தோன்றிய காலத்திலிருந்து ஒவ்வொரு மானுட உருப்படிக்கும் தனித்தனி நிலைமை உண்டு. தன் உயிரின் நோக்கம் நிறைவேறும் ஆற்றலும் உணர்வும் உண்டு. இக்கொள்கை தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் உண்டு.

3. இருபால் கொண்டு விளங்கும் மனித தத்துவம் கொழுத்த செல்வத்திற்கு உரிமை கொண்டு தாம் பெரும் முடிபுகளை அடைவதற்காக நிறைந்த ஆற்றல் பெற்றிருந்தும், உன்னதத் திட்டத்தில் பங்குபெற்று, அவனோ, அவளோ, அனுபவத்தில் அறிவு, அன்பு, ஆற்றல் இவைகளைப் பெருக்கி அது கொண்டு நன்மை தீமைகளை அணுகியிருக்கும். ஆகவே இன்ப துன்பம் அறிவுள்ள அறிவும்

இவைகளை அனுபவிப்பதில், பித்தம்போல் கசப்பும், தேனைப் போல் சுவையும் அறிந்தும், வெறுப்பும் கொடுமையும் ஒரு புறம், கவர்ச்சியும் ஆறுதலும் மறுபுறம் துய்த்து நிற்கும்.

4. இந்த முறையில் விரித்தலில், வளர்த்தலில் ஒவ்வொன்றும் சட்டப்படி நடைபெறும். இதில் தயைதாட்சண்யம் குறுக்கு வழிகள் இல்லை. தண்டனையோ, பரிசோ இல்லை. தப்புத்தவறுகளும் இல்லை. எல்லாம்வல்ல ஒரு தனி முதலால் ஏற்பட்ட முறையில் அவ்வகை வேறுபாடுகள் தோன்றுமா ?

5. உன்னதத் திட்டத்தின் ஒரு கூறு என்னவெனில் வளர்ச்சித் தத்துவ முறைக்கு (Law of Evolution) இணங்க அடையவேண்டிய அறிவும் ஆற்றலும் சிறிது சிறிதாகப் பெறவேண்டியதே. வளர்ச்சித் தத்துவமுறையோ மூவுலகங்களிலும் மட்டுமன்றி அவைகளுக்கு மேலும் உண்டு என்று அறியவேண்டும். மானுட வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி இல்லை.

6. உன்னதத் திட்டத்தின்படி அறிவு வளர்ச்சி பெருகப்பெருக, தன்னைச் சுற்றிலுமுள்ள சூழ்நிலையில் வெறுப்பும் அமைதியின்மையும் தோன்றுவதுண்டு. அது அவரவர்களுடைய இயற்கைத் தன்மையை ஒத்திருக்கிறது. இந்த வகையில் இரண்டு மக்கள் ஒரே நிலையில் இருப்பதில்லை. வெளிப்புறம் வலிவாகவும் அறிவு சிறந்தும் இருந்தும் உட்புறத்தில் அமைதியின்மையும், புரட்சியும் ஏற்படக் கூடும். இந்தவகையில் குழப்பங்களும் மனக்கொதிப்புக்களும் ஏற்பட்டுச் சில சமயங்களில் தற்கொலைகள் ஏற்படலாம். (அமெரிக்காவில் இவை ஏற்படுகின்றன).

7. உன்னதத் திட்டத்தின் பண்பானது ஒவ்வொரு தனி ஆளும் இயற்கையிலே வளர்ச்சிபெறும் உரிமையும், உள்ளிருந்து வளர்ந்து பெருகுவதும் கொண்டிருப்பன்.

மேலே கண்ட ஏழுவகைகளும் உன்னதத் திட்டத்தின் பண்புகளாகும். இவைகளை அனுசரித்து அறிஞர்கள் தங்கள் திட்டங்களை வகுத்தால் மிக்க ஆறுதலோடு வெற்றி அடைவார்கள்.

6. **சில அதிர்ச்சிகள் :**—இவ்விதமாக உன்னத திட்டம் ஒன்று இருந்து உலகச் சம்பவங்களை நிகழ்த்துகின்றது என்றால் நமது அனுபவத்திற்குத் தோன்றுவது வெளிச் செயல்களே யன்றி உட்காரணங்கள் அல்ல. அவ்வாறான வெளிச் செயல்கள் அண்மையிலும் ஏற்பட்டன. அவ்வக் காலங்களில் மனிதனுடைய அத்துக்குமீறி நடைபெற்றும் இருக்கின்றன. தென் இந்தியாவில் சில ஆண்டுகளாக மேற்கிலும் தெற்கிலும், மழையின்றி வறட்சி தோன்றி மக்கள் உணவின்றி வருந்த, கீழ்க்கடற்கரையில் அதிக மழை பெய்து மக்களும், கால்நடைகளும், பயிர்பச்சைகளும் அழிந்தன. காரணம் அறிந்தோமா? அண்மையிலே, ஐரோப்பாவில் இங்கிலாந்து, ஹாலெந்து முதலிய நாடுகளில் நூற்றுக்கணக்கான ஏழை மக்கள் வெள்ளத்தினால் உயிரிழந்தும், பல நூற்றாண்டுகளாக பெரும் பணம் செலவழித்துக் கட்டின அணைகள் தகர்க்கப்பட்டு நிலங்கள் பெருவாரியாகச் சேதம் அடைந்தும் போயின. இச்சம்பவங்களுக்கு யார், எது, காரணம்? வெளிப்பார்வைக்கு யாதொரு பாவமும் செய்யாத மக்கள் அன்றோ இந்தத் தண்டனை அடைந்தார்கள். ஆனால் உன்னத திட்டத்தை இங்கே ஒத்திட்டுப் பாருங்கள். அந்தத் திட்டத்தின்படி நமது அறிவுக்கெட்டாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கவேண்டும். இந்தப் பெரும் சம்பவங்களுக்குக் காரண பூதமாக இருக்க வேண்டும். அதனை நேரில் அறியும் ஆற்றல் நமக்கு இல்லை. அறிந்தால் அநீதி என்றும் விபரீதம் என்றும் கூறமாட்டோம்.

7. **ஊழ் :**—உன்னதத் திட்டம் என்று ஆங்கில மாசிகை கூறும் விதிமுறை எது? இது நமது நாட்டுக் கருத்துத் தொடர்பிலும் உண்டு. இதனைத் தமிழில் ஊழ் என்ற சொல்லால் குறிப்பர். வினைமுறை என்றும் கூறலாம். வடமொழியில் கன்ம சித்தாந்தம் என்பர். 'தினைவிதைத்தால் தினை அறுப்போம்', 'வினைவிதைத்தால் வினை உண்போம்' அல்லவா? வினையின் தொகுதிதான் ஊழ் ஆக விளைகிறது. ஊழின் வலிமையாரால் அளக்கமுடியும்?"

" ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும் "

என்றார் வள்ளுவனாரும். ஊழின் வினைகளை நாம் அனுபவித்தே தீரவேண்டும். அது எவ்வாறு ஏற்படுகிறது, எதனால் ஏற்படுகிறது, என்பது மட்டும் அறிவதில்லை. அவைகளை அறிய பலரும் முயலுகிறார்கள். ஆனால் நமக்குக் கிடைப்பது அரிது.

மேலும் வள்ளுவனார்.

" வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தலரிது "

என்று கூறியிருக்கிறதை அறிக. இதில் வகுத்தான் வகுத்த வகை எது? அதுவே மேலே உன்னதத் திட்டம் என்று ஆங்கில மாசிகை கூறுகிறது. ஆகவே அதனையே "ஊழ்' என்று தமிழில் கூறுகிறார்கள். அந்த விதியை விலக்கி நாம் எந்தத் திட்டம் வகுத்தாலும் பயனில்லை.

ஆனாலும் அதே திருவள்ளுவர்,

" தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும் "

என்றும்,

" ஊழையும் உப்பக்கம் காண்பார் உலைவின்றி
தாழா துஞற்று பவர் "

என்றும் கூறுவதையும் காண்க. இவைகளால் என்ன நமக்குக் கிடைக்கின்றன என்றால் ஊழ் வெகு வலிதாக இருப்பினும் முயற்சியால் அதனை ஒரு சிறிது மாற்றமுடியும் என்பதே. இதற்கு மார்க்கண்ட முனிவர் சரிதையை எடுத்துக்காட்டுவர். மற்றச் சரிதைகளும் நமது சைவ நூல்களில் காண்கிறோம். உன்னதத் திட்டமாகிய ஊழ் ஒருபுறம் வெகு வலிதாக இழுக்க அதையும் மீறி நமது மதியின் வல்லமையால் வேறு ஒருபுறமாக நாம் வகுக்கலாம் என்று சரிதங்கள் கூறுகின்றன. இதனால் "விதியை மதியால் வெல்லலாம்" என்ற பழமொழி உலகில் தோன்றியிருக்கிறதல்லவா?

---

2. தலப்பகுதி

1. திருவொற்றியூர்

1. இடம் : சென்னைக்கு வடக்கே 5 கல்லிலும், புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கே $\frac{1}{2}$ கல்லிலும் உள்ளது. கோயிலுக்குச் சுற்றி 4 மாட வீதிகளும், கீழ்ப்புறத்தில் கடற்கரைமட்டும் பல கிளைத் தெருவுகளும் உண்டு. ஊரில் தங்குமிடங்களும் விசைவண்டி வசதிகளும் புகைவண்டி நிலையமும் உண்டு.

2. கோயில் : கோயில் பெரியது. மிகவும் பழமை யானது. ஐதீகங்களும், சரித்திரச் சான்றுகளும் கணக் கின்றி இருக்கின்றன. ஆனால் ஒழுங்கு படுத்தி எழுதப்பட வில்லை. மூலத்தானம் மிகப் பழமையானது. இருள் அடைந் துள்ளது. புதுப்பிக்கப்படாமல் பழைய நிலையிலேயே இருக் கின்றது. அம்மனுடைய மூலத்தானம் தெற்கு நோக்கியிருக் கின்றது. வடமேற்கில் பிராகாரத்தில் ஆதிபுரீசர் கோயில் தனியாக அமைந்துள்ளது. அது புதிதாகக் கருங்கல் திருப் பணி ஆக்கப்பட்டுள்ளது. கோயிலின் முன்கோபுரம் திருப் பணி செய்யப்பட்டுள்ளது.

3. மூர்த்திகள் : சுவாமி – படம்பக்க நாதர்; புற்றிடங்கொண்டார் (வான்மீக நாதர்)-தியாகராஜர். தேவியார்; - வடிவுடைநாயகி; திரிபுராந்தகி. மரம் - அத்தி. தீர்த்தம் பிரம்ம தீர்த்தம். தெப்பக்குளம் கோயிலின் வடகிழக்கில் பெரிதாக உள்ளது. மற்ற மூர்த்திகள் - எழுத்தறியும் பெருமாள், மாணிக்கத் தியாகர், மகிழடிப் பிள்ளையார், முதலியன கோயிலுக்குள்ளும், கலியநாயனார் திருவிளக்குத் திருப்பணி செய்தபோது, அருள் செய்த மூர்த்தி, சந்நிதித் தெருவிலும், கோயில் கொண்டுள்ளார்கள்.

4. ஐதீகங்கள் : புராணப்படி திருவொற்றியூர் என்ற பெயர் பிரளய காலத்தில் அக்கினியே கோயிலாக அமைந் துக் கொண்டு, இறைவன் பிரளய வெள்ளத்தை விலகச் செய்ததினால் அப்பெயர் உண்டாயிற்றாம். இறைவன் செய்த

பிரதோஷ நடனத்தை நித்திய நடனமாகச் சிவபெருமான் நந்திதேவருக்கு அருளிச் செய்தார். வான்மீகி முனிவர் முதலியோர் பூஜித்துப் பேர் பெற்றனர். அகஸ்தியருக்கு திருக்கல்யாணக் காட்சி கொடுத்தருளினார். வாசுகி பூஜித்த போது தம் உருவத்தில் இணைத்துக்கொண்ட வகையில் சுவாமி படம்பக்க நாதர் ஆனார். ஏலேல சிங்குருக்கு மாணிக்கங்கள் கொடுத்துத் தியாகேசர் ஆயினார். சுந்தரமூர்த்திகள் எழுந்தருளியபோது ஞாயிறு கிழாருடைய மகள் சங்கிலியாரை மகிழின்கீழ் இருந்து சபதம் செய்து மணந்து, சபதம் தவறினதினால் கண் இழந்தார்.

5. பாடல்கள் : மூவரும் பாடிய பதிகங்கள் 8 உண்டு. அப்பருடைய 'மனமெனும் தோணி பற்றி' என்ற தேவாரம் மிகச் சிறந்தது. இறைவனை 'ஒன்றைக் கண்ண'னென்று கூறிய பாடல் நகைச்சுவை கொண்டது. சுந்தரமூர்த்திகளுடைய 'அழுக்கு மெய்' என்ற பதிகம் மிகவும் உணர்ச்சி ததும்பியது. இனி திருவொற்றியூரைப் பற்றிப் பட்டினத்தடிகள் வெகு அருமையான பாடல்கள் பாடியிருக்கின்றார்கள். அண்மையிலே இராமலிங்க அடிகள் இங்கிதமாலை முதலிய கணக்கற்ற செய்யுட்களைப் பாடியிருக்கின்றார்கள். இந்தப் பிரபந்தங்களைத் தவிர திருவொற்றியூர்ப் புராணம் என்ற செய்யுட் புராணமும், உரைநடைப் புராணமும் உண்டு. பெரிய புராணத்தில் பல இடங்களில் திருவொற்றியூர்ப் பெருமை கூறப்பட்டுள்ளது.

6. வேறு சில குறிப்புகள் : ஊருக்கும்கடற்கரைக்கும் இடையில் பட்டினத்தார் கோயில் இருக்கின்றது. மேலும் இராமலிங்க அடிகளின் மடங்களும் இருக்கின்றன. சந்நிதித் தெருவில் திருக்கோயிலுக்குத் தென்கிழக்கில் சங்கராசாரியார் மடம் ஒன்று இருக்கிறது. ஆதிசங்கரர் திருவொற்றியூருக்கு வந்து ஆலயத்தில் இருந்த சக்தி பீடத்தின் ஆற்றலை குறைத்து விட்டதாக ஒரு சரிதம் உண்டு. கோயிலுக்கு வெளிப் பிரகாரத்தில் ஒரு சிறு துவாரத்துக்குள் வட்டப்பாறை அம்மன் என்று ஒரு சக்திபீடம் உண்டு. அவ்வம்மனுக்கு உயிர்ப்பலி இடும் வழக்கமும் இருந்

தது. அந்தச் சக்தியைத்தான் குறைத்து விட்டதாகக் கூறுவர்.

7. வரலாறு: திருவொற்றியூரின் வரலாறு முழுதும் ஆராயப்படவில்லை. கோயிலில் நாளதுவரை படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் 169 இருக்கின்றன. அவைகளைப்பற்றித் தென் இந்திய கல்வெட்டு பரிசோதகர் 1912, 13 ஆண்டு அறிக்கைகளில் வெளியிட்டுள்ளார். 1912 அறிக்கை (67-ம்) பக்கத்தில் இராஜாதி ராஜன் II. திருவொற்றியூர் படம்பக்க நாயகர் கோயிலில் நடந்த விழாவின்போது வழிபாடு செய்தாரென்றும், அப்போது சைவக் குருக்கள் சதுரானன பண்டிதனும், வாகீசுவர பண்டிதனும் உடன் இருந்தார்கள் என்றும், அவர்களில் வாகீசுவர பண்டிதன் சோம சித்தாந்தத்தை அறிந்தவனென்றும் அரசன் கோயிலிலிருந்தபோது (ஸ்ரீ) ஆளுடைய நம்பிகள் (ஸ்ரீ) புராணம் வாசிக்கப் பட்டதென்றும், கல்வெட்டுகளால் அறியப்படுகிறதென்று கூறுகின்றது. இராஜாதிராஜனுக்குப் பிறகு, இராஜாதிராஜனுடைய மகன் குலோத்துங்கன் III விழாவின் போது திருவொற்றியூரைத்தரிசித்திருக்கிறான். அந்தக் காலத்தில் திருவொற்றியூர் சோமசித்தாந்தத்திற்குப் பெயர் பெற்றிருந்தது. அச்சித்தாந்திகள் கபாலிகர் என்று கூறப்பட்டார்கள். அவர்கள் அருவருப்பான கொள்கை உடையவர்கள். அச்சித்தாந்தத்தை சங்கராசாரியார் கண்டனம் செய்ததாகக் கூறப்படுகின்றது.

இனி 1913-ம் ஆண்டு அறிக்கை 86 வது பக்கத்தில் மற்றும் சில விவரங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இக்கோயிலில் இராஜேந்திரச் சோழன் காலத்தில், (1012 - கி. பி.) நிரஞ்சன குருவின் மாணுக்கர் சதுரானன பண்டிதர் கோயில் விமானத்தைக் கட்டினுர். நிரஞ்சன குரு 9-ம் நூற்றுண்டில் இருந்தவர். அக் காலத்தில் கோயில் சுற்றுலயங்களில், 1. பிள்ளை சுப்பிரமணியர், 2. திருவட்டப்பிறை பிடாரியார், 3. காராணை விடங்கர். 4. படம் பக்கத்தேவர், 5. க்ஷேத்திரபாலதேவர், 6. சூரியர், 7. அரிஞ்சீசுவர முடையார், 8. கம்பீசுவரமுடையார், 9. விடேல் விடுகீசுவரர், 10. துர்க்

கையார், 11. அணுக்கப் பிள்ளையார், முதலிய மூர்த்திகள் இருந்தன. இப் பெயர்களில் 2-ம், 10-ம் ஒன்றே. 4 வது பெயர் கௌலீசுவரர் என்றும் கூறப்பட்டுள்ளது. கௌலீசுவரர் ஆலயம் வீரராஜேந்திரன் 5 வது ஆண்டு அதாவது 1067-ல் கட்டப்பட்டது. காராணை விடங்கர் என்ற பெயர் சுயாரோகணம் என்ற பெயராக இருக்கலாம். இக்கோயிலில் நடனப் பெண்கள் திருவெம்பாவை, திருப்பதிகம் பாடினார்கள். இராஜேந்திரச் சோழன் மடம், குலோத்துங்கச் சோழன் மடம் என்ற மடங்கள் இருந்தன. இராஜேந்திரச் சோழன் மடத்தைப் பிரபாகர பட்டனுடைய மனைவி ஆரியம்மை கட்டினாள். குலோத்துங்கச் சோழன் மடத்தில் நாள் ஒன்றுக்கு 50 சைவர்களுக்கு உணவு அளிக்கப்பட்டது. தவிர திருஞானசம்பந்தர் மடம், நந்திகேசுவரர் மடம் என்பவைகளும் இருந்தன. மேலும் விஜயநகரத்தார் காலத்தில் அங்கராயன் மடம் இருந்தது. மண்டபங்களிலே வக்காணிக்கும் மண்டபம், வியாகரணதான வியாக்கியான மண்டபம் முதலியவைகள் இருந்தன. மற்றும் திருவிழாக்களிலும், மற்ற காலங்களிலும் கணக்கற்ற தானங்கள் செய்யப்பட்டன. 13-ம் நூற்றாண்டில் முசல்மானியர்கள் கோயிற் சொத்துக்களைக் கொள்ளையடித்தார்கள்.

இராஜேந்திரன் காலத்தில் மூலஸ்தானத்தைக் கட்டினவன் வீரசோழதச்சன் இரவி என்பவன். குற்றமற்ற கருங்கல்லால் மூன்று நிலைகளைக் கட்டி அதில் சரணம், தோரணம், கூடம், கோஷ்டம், நீபம், சிங்கமுகம் நாசிகம், என்பவைகளை அலங்கரித்தான். (126|1912) கோயில் திருவிழாக்களில் மார்கழி திருவாதிரை நாளில் இராஜேந்திரச் சோழன் திருநாள் என்ற திருவிழாவை அரசன் நடத்திவைத்தான். கோயிலில் மேல் விசாரணையை இராஜேந்திரசிங்க மூவேந்த வேளான் என்ற அமைச்சன் நடத்தினான். அப்போது கோயில் கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டன. இவ்வித விசாரணைகள் அடிக்கடி நடந்தன. இவை முதலான பல செய்திகள் அவ்வறிக்கையில் காணலாம்.

---

2. திருமழபாடி

(சு. சுவாமிநாத தேசிகர்)

"பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே"

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையில்லாப் பெருங் கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் நிகழ்குறியாம் சிவலிங்காதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பல இருப்பினும் அவற்றிற்கெல்லாம் தலைசிறந்து சிறப்புற்று விளங்கும் தலம் இத் திருமழபாடி என்னும் தலமே யாகும்.

1. தலப் பெயர்கள் : கொல்லி மழவன் என்ற அரசன் முற்காலத்தில் இப்பகுதியை ஆட்சி செய்து வந்திருக்கிறான். பாடி என்பது சேனைகள் தங்கியுள்ள இடம் ஆகும். மழவர்களின் சேனைகள் வாழ்ந்துவந்த இடம் ஆதல்பற்றி மழவர்பாடி எனப் பெயர் ஏற்பட்டு அது மழபாடி என மருவி வழங்கலாயிற்று. தேவாரப் பாடல்களிலும் மழபாடி என்பதே காணப்படுகின்றது. இவ் வரும் பதி பனைமரத்தை மிகுதியாகக் கொண்டிருந்ததால் தாலவனம் என்றும், மார்க்கண்டேய முனிவருக்குச் சிவபெருமான் காட்சி தந்து மழு என்னும் படையைத் தாங்கி ஆடல் செய்தருளிய காரணத்தால் மழுவாடி எனப் பெயர் ஏற்பட்டதென்றும் வரலாறுகள் வழங்கப்படுகின்றன. வடமொழியில் "பரசு நர்த்தனபுரம்" என்று வழங்கப்படுகின்றது.

"மருமலர் மழைகடுவி வானவர் வணங்கியேத்தக்
கருமழை யனையகூந்தற் கவுரிகண்டினிது போற்றப்
பொருமழு வங்கையேந்திப் புனிதநின் றாடலாலே
பெருமழு வாடியென்னும் பெயர்பெறு மந்தமூதூர்"

2. இருப்பிடம் : இவ்வரும்பதி தென்னிந்திய இருப்புப்பாதையில் திருச்சி—விழுப்புரத்திற்கு இடையில் உள்ள புள்ளம்பாடி புகைவண்டி நிலயத்திலிருந்து தென் கிழக்கில் 10 மைல் தூரத்திலும், தஞ்சைக்கு வடக்கே உள்ள திருவையாற்றிற்கு வடமேற்கில் 4 மைல் தூரத்திலும் இப்பதியை அடையலாம். திருவையாறு மார்க்கமாகச் சென்றால் கொள்ளிடத்தைக் கடக்கவேண்டியிருக்கும். இவ்வூரில் ஜனத்தொகை சுமார் 3000 இருக்கிறது.

3. இறைவன் வயிரத் தூணரான வரலாறு : முன்னொரு காலத்தில் புருடாமிருக முனிவர் தாம் தினந்தோறும் பூஜிப்பதற்கு ஓர் சிறந்த சிவலிங்கம் பெறக் கருதி எங்கும் கிடைக்காமல் சத்தியலோகம் சென்று பிரமன் பூஜித்து வந்த லிங்கத்தைக் கண்டு தமக்குக் கொடுக்குமாறு வேண்டினார். பிரமன் கொடுக்க மறுக்கவே முனிவர் காவிரிக்கு வடதிசையிலுள்ள பனங்காடாயிருந்த இத் தலத்தில் வந்து கடுந்தவம் புரிந்தார். சிவபிரான் முனிவருக்குக் அரிய காட்சிக் கொடுத்துச் சோதிமயமான ஒரு சிவலிங்கத்தைக் கொடுத்தருளினார். முனிவரும் பூஜித்து வந்தார். பிரமன் தன்னிடமிருந்த லிங்கத்தைக் காணாமல் இவ்விடத்தில் இருப்பதை அறிந்து வந்து முனிவருடன் போர் செய்து மூல சிவலிங்கத்தைத் தன் முழுவலிமையால் பெயர்க்க முயன்றார். அப்போது பெருமான் வச்சிரத் தம்பமாக (வயிரத் தூணாக) விளங்கிப் பிரமனுக்கு அரிய காட்சி தந்து "உத்தம மகிமையாலே உன்பதி தனிலும்போத இத்தல நமக்கன்பாகி இருத்தலால் நீயும் வைத்த பேரன்பாலும் வந்தெமைப் பணிவாய்" என்று கூறி மறைந்தார். பிரமனும் தன்னிடம் சென்றார். முனிவரும் பெருமானுக்குத் திருக்கோயில் அமைத்து வழிபட்டு வரலானார்.

4. சிவபெருமான் மழுவேந்தி ஆடியது : சிவபெருமான் தில்லையில் திருநடனத் திருக்கூத்து ஆடியதைப் போலவே மார்க்கண்டேய முனிவரும் பெருமான் திருக்கூத்தைக் கண்டு மகிழ விரும்பி இத்தலத்துக்கு வந்து கடுந்தவம் புரிந்தார். சிவபெருமான் இவருடைய தவத்திற்

கிரங்கி வைகாசிமாதம் விசாகம் கூடிய பௌர்ணமி நாளில் காட்சிக் கொடுத்துக் கையில் மழுப்படை ஏந்தித் திருநடனம் செய்தருளினார்.

" நந்திமுழக்கிட மத்தள நங்கை மகிழ்ச்சி படைத்திடத்
துந்துபிமிக்க முழக்கது தொந்த மெனச்சதி பெற்றிட
உந்திய சச்ச புடத்தடை வொன்று பதக்கிர மத்தினின்
வந்து மழுப்புனே சங்கரன் மன்றி னிடத்தி னடித்தனன் "

மார்க்கண்டேயர் ஐந்து பேரறிவுங் கண்ணுகக்கொண்டு தரிசித்து இன்புற்றார். இவ்விழா பிரதி ஆண்டுதோறும் வைகாசி விசாக நாளில் திருநடனக் காட்சி யளிக்கப்படுகிறது.

5. திருநந்திதேவரின் திருமணம் : வசிஷ்ட முனிவருக்கும் அருந்ததிக்கும் இத்தல இறைவன் அருளால் ஓர் பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை ஊர்மிளாதேவி என்னும் பெயருடன் சிவபக்தியில் சிறந்து வளர்ந்து வந்தது.

திருவையாற்றில் சிலாத முனிவர் ஐயாறப்பரின் திருவருளால் ஓர் ஆண் மகவைப் பெற்றிருந்தார். முனிவர் வேள்வி செய்ய நிலத்தை உழுதபோது அழகிய பெட்டியில் ஓர் குழந்தை இருக்கக்கண்டு எடுத்துவந்து மனையிடம் கொடுத்து வளர்த்து வரலானார். குழந்தை நந்திகேசுவரர் என்னும் பெயருடன் கல்வி, ஒழுக்கம் முதலியவைகளில் சிறந்து விளங்கியது. வசிஷ்ட முனிவர் தம் புதல்விக்கு மணப்பருவம் அமையவே, திருவையாற்றிலுள்ள சிலாதமுனிவரின் புதல்வரான நந்திகேசுவரருக்குத் திருமணம் செய்து கொடுக்கத் தீர்மானித்தனர். சிலாத முனிவர் சுற்றத்தாருடன் தம் புதல்வரை அழைத்துக்கொண்டு மழபாடி வந்தனர். சிலாத முனிவரின் வேண்டுகோளுக்கிணங்கி ஐயாறப்பரும் தம் தேவியாருடன் மழபாடிக்கு எழுந்தருளினார். பங்குனி மாதம் வளர்பிறை புனர்பூசம் கூடிய நன்னாளில் வேதம் முழங்க மறையொலி திகழ ஊர்மிளா தேவிக்கும் நந்தியெம்பெருமானுக்கும் திருமணம் நிறைவேறியது. ஆண்டுதோறும் மேற் குறித்த நாளில் திருமணவிழா சிறப்

பாக நடைபெறுகிறது. இதற்கு 27.வது நாள் திருவையாற்றில் சப்தஸ்தான விழா நிகழும். இது நந்திதேவரின் திருமண ஊர்வலம் என்று சொல்வர்.

"அங்கணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபிற் கெல்லாம் முதல்குரு நாதனாகிப்
பங்கயத் துளவ நாறும் வேத்திரப்படை பொறுத்த
செங்கையெம் பெருமான் நந்தி சீரடிக் கமலம் போற்றி"

6. சுந்தரர்க்குக் கனவில் அருளியது: சுந்தரமூர்த்தி நாயனார் கண்டியூர் முதலிய பல திருப்பதிகளையும் தரிசித்துக்கொண்டு திருவாலம்பொழில் என்னும் தலத்தை அடைந்து பெருமானைத் தரிசித்து அவ்விடத்தில் இரவில் துயில் கொண்டார். மழபாடி நாதர் அவருடைய கனவில் தோன்றி 'மழபாடிக்கு வர மறந்தாயோ' என்று சொல்லி மறைந்தருளினார். சுந்தரர் விழித்தெழுந்து காவிரி நதியைக் கடந்து மழபாடிக்கு வந்து பெருமானைத் தரிசித்துப் "பொன்னார் மேனியனே" என்ற பதிகத்தைப் பாடிச் சில நாள் அவ்விடத்திலேயே தங்கியிருந்தார்.

இப்பதிகத்தில் ஒவ்வொரு பாட்டிலும் 'மழபாடியுள் மாணிக்கமே, உன்னை யல்லால் இனி யாரை நினைக்கேனே' என்ற தொடர்களை வைத்துப் பாடியுள்ளார்.

இத்தல இறைவன் சந்திரனுக்குள்ள கயநோயைப் போக்கியதால் வைத்தியநாதர் என்னும் பெயர் வழங்கப்படுகிறது.

7. தலப் பெருமைகள்: இவ்வாலயம் ஊருக்குக் கிழக்கில் கொள்ளிட நதிக் கரையில் அமைந்துள்ளது. இயற்கையழகு பொருந்தியதாயும் சோலைகள் சூழ்ந்ததாயும் உள்ளது. மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. மழவ மன்னர்களுக்குப் பாடியிடமாக இருந்த இடம். இலக்குமி, சந்திரன் இவர்களுக்கு நோய் நீங்கப்பெற்றது. தவஞ் செய்வார்க்குத் தக்க இடம். கோயிலில் நவக்கிரகங்கள் இல்லை: அதற்குப் பதிலாகச் சுவாமி சந்நிதியில் மூன்று குழிகள் உள்ளன. சிபிச் சக்கரவர்த்திக்கு நவக்கிரக

தோஷங்கள் நீங்கிய இடம். நான்கு திசைகளிலும் ஐயனார் கோயில்கள் உள்ளன. தேவார ஆசிரியர் மூவராலும் பதிகம் பாடப்பெற்ற பெருமையுள்ளது. 'மழ பாடியை மறந்தாயோ ?' என்று சுந்தரருக்கு நினைப்பூட்டிய சிறப்பை உடையது.

மழபாடிப் பெருமானின் மாண்புகள் தேவாரப் பாடல்களில் மிகுந்துள்ளன. 'மழபாடி மன்னும் மணாளன்' என்றும் 'மழபாடி வயிரத்தூணே' என்றும், 'மழபாடியுள் மாணிக்கமே' என்றும் நாவுக்கரசரும் சுந்தரரும் இவ்விறைவனைப் போற்றியுள்ளார்கள். மேலும் ஞானசம்பந்தப் பெருந்தகையார் 'மழபாடியைத் தலையினால் வணங்கத் தவமாகுமே' என்றும் புகழ்ந்து பாடியுள்ளார்.

8. வழிபட்டோர் : புருடா மிருகர், மார்க்கண்டேயர், திருமால், இலக்குமி, துர்க்கை, காளி, சூரியன், சந்திரன், அக்கினி, அசுவினிதேவர், அகத்தியர், பராசரர், வசிஷ்டர், பீமன், ஐயடிகள் காடவர்கோன், ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் மற்றும் பல தேவர்களும் முனிவர்களும் தரிசித்துப் பேறுபெற்ற திவ்யதலம்.

9. ஆலய அமைப்பு: இவ்விடத்தில் கொள்ளிட நதி வடக்கு நோக்கிச் செல்கிறது. இவ்வாலயம் கிழக்கு பார்த்த சந்நிதானம். முன்கோபுரம் ஏழுநிலை மாடங்களுடன் விளங்குகிறது. மூன்று பிரகாரங்கள் உள்ளன. சுவாமி கோயில் தென்புறத்தில் உள்ளது. அம்மனுக்கு 2 சந்நிதிகள் உள்ளன. ஒன்று நடராஜர் சந்நிதிக்குப் பக்கத்திலும், மற்றொன்று வடபுறத்திலும் உள்ளன. சுந்தராம்பிகை சந்நிதி கிழக்குப் பார்த்தும் பாலாம்பிகை சந்நிதி தெற்கு பார்த்ததுமாக அமைந்துள்ளது. கோயிலின் உள்தளம் ஆற்றின் அளவிற்குச் சமமாயிருப்பதால் வெள்ளம் வரும் காலங்களிலும் மழைக் காலங்களிலும் கோயிலுக்குள் தண்ணீர் மிகுதியாக ஊறும். இது இறைவனின் கருணைப் பெருக்கைக் காட்டும். கோயிலில் கிழமேல் அளவு சுமார் 553 அடி. தென்வடல் அளவு சுமார் 398 அடி.

10. சுற்றுக் கோயில்கள் : இவ்வாலயத்திற்கு வெளியே தேர்நிலேக்குப் பக்கத்தில் கொந்தளவி நாயகர் கோயில் உள்ளது. கோயிலேச் சுற்றி நான்கு பக்கங்களிலும் ஐயனார் கோயில்கள் உள்ளன. மேற்கில் ஆகாச ஐயனாரும், கிழக்கில் மணிகட்டி ஐயனாரும் காவலாக உள்ளனர்.

11. சிற்பங்கள் : இவ்வாலயத்தில் சோமஸ்கந்த வடிவம் ஒரே சிலேயில் அமைக்கப்பட்ட 2 சிலேகள் உள்ளன. கல்யாணசுந்தரர், நந்திகேசுவரர், ஊர்மிளாதேவி, அகத்தியர், சுந்தரர் முதலியோரின் திரு உருவங்கள் சிலேயில் உள்ளன. நடராஜர் மண்டபத்தில் பல சித்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தக்ஷிணமூர்த்திக்கு அழகிய இருசிலேகள் உள்ளன. ஒன்றின் பக்கத்தில் பசுவடிவம் உள்ளது. அலங்கார மண்டபத்தில் சிங்கத் தூண்கள் உள்ளன. சிங்கம் தூணேத் தாங்குவதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

12. தீர்த்தங்கள் : அம்மன் சந்நிதிக்கு எதிரில் உள்ள தீர்த்தம் (1) இலக்குமி தீர்த்தம். இலக்குமிக்கு ஒரு முனிவர் சாபத்தால் ஏற்பட்ட சருமநோய் நீங்கியது (2) சிவ கங்கை (3) கொள்ளிடம் (வடகாவிரி) இந்நதி இவ்வாலய சந்நிதானத்தில் உள்ளது.

13. திருப்பணி : இவ்வாலயம் சமீபத்தில் திருப்பணி செய்யப்பெற்று 2 ஆண்டுகட்கு முன் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

14. பூஜைகள் : இவ்வாலயத்திற்கு அநுதினமும் நான்குகால பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

15. திருவிழா : இல்வாலயத்திற்குப் பிரதி ஆண்டு தோறும் மாசி மகத்தில் பிரமோற்சவம் நிகழும். பங்குனி மாதம் புனர்பூச நாளில் நந்திகேசுவரருக்கும் ஊர்மிளா தேவிக்குப் திருமணம் நடைபெறும்.

16. ஆலய ஆட்சி : இவ்வாலயத்தில் இந்துமத அறநிலேயப் பாதுகாப்புக் கழகத்தினரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மானேஜர் ஒருவர் வேலே பார்த்து வருகிறார். கௌரவ

தர்மகர்த்தர் மூவர் உடனிருந்து கோயில் பணிகளை நன்கு கண்காணித்து வருகின்றார்கள்.

17. தலபுராணம்: இத்தலத்திற்கு வடமொழியில் புராணம் உண்டு. இதனைத் தழுவித் தமிழில் திருமழவாடிப் புராணவசனம் என்ற நூல் உண்டு. பிற்காலத்தில் ஸ்ரீகமலை ஞானப்பிரகாச தேசிகர் என்பவர் திருமழுவாடிப் புராணம் என்ற நூலைச் செய்யுளில் அமைத்துப் பாடியுள்ளார்.

18. வருமானமும் சொத்துக்களும்: ஆண்டு தோறும் கோயிலுக்கு நெல், ரொக்கக் குத்தகை இறும் முதலியவைகளின் மூலமாய் சுமார் ரூ 10000 வருமானம் வரும். சுமார் ரூ 2000 மதிப்புள்ள திருவாபரணங்கள் உண்டு.

19. சமயத்தொண்டு: ஒவ்வொரு பௌர்ணமி நாளிலும் இவ்வாலயத்தில் சமயச் சொற்பொழிவுகளும், தேவார பாராயணமும் நடைபெறும். அப்போது உள்ளூரி லும் வெளியூரிலும் உள்ள அறிஞர்கள் வந்து சொற்பொழிவு கள் நிகழ்த்துவார்கள்.

20. கல்வெட்டுக்கள்: இவ்வாலயத்தில் 30 கல் வெட்டுகள் தமிழில் உள்ளன. இவைகள் 1895-ம் வருஷத் தில் 70 முதல் 99 எண்கள் வரையில் சர்க்காரால் நகல் எடுக் கப்பட்டிருக்கின்றன. தென்னிந்தியக் கல்வெட்டுப் புத்த கத் தொகுதியில் (S. I. I. Vol. V) இக் கல்வெட்டுக்கள் உள்ளன.

21. திருநாமங்கள்: சுவாமி-வைத்தியநாதர், வஜ் ரதம்பேசுவார், தேவியார் - சுந்தராம்பிகை, பாலாம்பிகை, (சுந்தர விநாயகர்) தீர்த்தம்- கொள்ளிடம். பாடல்கள் - அப் பர், சம்பந்தர், சுந்தரர், ஆகிய மூவர் பாடல் பெற்றது.

ஏரார் முப்புரமும் எரியச்சிலை தொட்டவனை
வாரார் கொங்கையுடன் மழபாடியுள் மேயவனைச்
சீரார் நாவலர்கோ னூரா னுரைத்ததமிழ்
பாரோ ரேத்தவல்லார் பரலோகத் திருப்பாரே. (11)

CONNEMARA PUBLIC LIBRARY
18 JUL 1955
MADRAS

3. சாத்திரப் பகுதி

சிவப்பிரகாசம் மூலமும் உரையும்

(தருமையாதீனப் புலவர் — முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்,
தமிழ்ப் பேராசிரியர், ஓரியண்டல் காலேஜ், தருமபுரம்)

[மலர் 26; இதழ் 2; 61-ம் பக்கத் தொடர்ச்சி]

சித்தியாருள்,

"பாசஞானத்தாலும் பசு ஞானத்தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடிப்பாத
நீழற்கீழ் நில்"

என்றதும்,

"வேதசாத்திர மிருதி புராண கலைஞானம்
விரும்பசபை வைகரியாதித் திறவிகள் மேலாம்
நாதமுடிவான எல்லாம் பாசஞானம்
நணுகியான்மா இவைகீழ் நாடலாலே
காதலினுன் நான் பிரமம் என்னும் ஞானம்
கருது பசுஞானம் இவன் உடலிற் கட்டுண்
டோதி உணர்ந் தொன்றொன்று உணர்ந்திடலாற் பசுவாம்
ஒன்றாகச்சிவன் இயல்பின் உணர்ந்திடுவன் காணே"

என்றதும் ஈண்டுணர்தல் விளக்கந்தரும்.

இறையருள் ஞானம் நண்ணில் - சிவனை அவன் திருவடி ஞானத்தாற் சேர்ந்தால் தேசு உறும். திருவருளொளி (சிவஞானப் பிரகாசம்) பொருந்தும். அதனுல் - அச்சிவப் பிரகாசத்தால். முன்னைச்சிறு அறிவு - பழைய ஏகதேச ஞானம். நேசம் - அன்பு, 'நேசமொடும்' என்று சித்தியாரிலும் இருப்பதறிக. உயர் பரத்து நிற்பது - பாதநீழற்கீழ் நீங்குந் தீங்க கலத்தூங்குவது. நிட்டை - உறுதியாக நிற்றல் என்னும் பொருட்டாதலின் 'நிற்பது நிட்டை' என்றார். 'ஈசனை உணரவொண்ணுது' என்ற பாடமே சிறந்தது. அறிதல் புறத்தையும் உணர்தல் அகத்தையும்

பற்றிவரும். 'உணர்ந்தார்க் குணர்வரியோன்' 'எப்பொருளு மாக்குவான் ஈசனே' எனும் உணர்வும் அப்பொருள்தான் ஆளுடையான் அடியார்கள் எனும் அறிவும்' என்புழிக் காண்க.

இறையருள் ஞானம் நண்ணில் தேசுறும். அதனால் முன்னைச் சிற்றறிவொழிந்து நேசமோடு உயர்பரத்துச் சேர்ந்து நிற்பது என்பதும் 'அவனருளே கண்ணாகக் காணின் அல்லால் காட்டொணாதே' 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்பனவும் 'அருளா லுணர்வார்க் ககலாத செம்பொருள்' என்று வினா வெண்பாவி லாசிரியர் அருளியதும் ஒன்றே யாதலுணர்க. உயர்பரம் என்றதில் உயர்வு துரியத்தையும் பரம் அதீதத்தையும் குறித்தல் அநு பவத்தில் விளங்கும்.

விளம்பிய வகையின் நிட்டை மேவிடல் அரிதேல் முன்னம்
அளந்தறி வளித்த வற்றின் அளவுமற் றவற்றி னாலே
உளங்கொளுந் தனையும் உள்ள படியுமுற் றுணர்ந்து செவ்வே
தளர்ந்திடா துவப்ப மற்றத் தன்மைய தாகுந் தானே. (அரு)

என்பது, மேற் சொல்லிய வகையில் நிட்டை அடைதல் அரிதென்னில், முன்னர்ப் பெத்தத்தில் (ஜீவ) போதம் ஒடுங்கியவிடத்து, (அப்போதத்தையும் இச்சையையும் கிரியையும் விளக்கிக், கன்மத்தையும் காலத்தையும்) வரை யறுத்து, அவ்வறிவுஞ் செயலும் புறத்தே செல்லுதற்கு அறிவைக் கொடுத்த தத்துவங்களின் தோற்றம் நிலையீறு களையும் பின்னர் அத்தத்துவங்களாலே இன்பத் துன்பங் களை அறிந்து உள்ளுதலைக் கொள்ளும், (ஆன்மாவாகிய) தன்னையும். சடத்துக்குத் தொழிலும் சித்துக்கு அறிவும் உடன் நின்று செய்தும் செய்வித்தும் உணர்த்தியும் உணர்ந் தான் ஒன்றோடுந்தட்டாது தூயதாய் நிற்குந் திருவருளியல் பையும் அத்திருவருளே கண்ணாகக் கொண்டுணர்ந்து, அவ் வுணர்ச்சிக்கண் சலித்து, ஞானக் கிரியைகள் புறப்பொருள் களிலே முனைத்துச் செல்லாது, அவற்றுள் அடங்கி, முதல் வனுபகாரத்தை இடையீடின்றிக் கருதிப்போற்றிப் பேரன்பு

செய்ய, முற்கூறப்பட்ட நிட்டையானது தலைப்படும் என்பதாம்.

இஃது உபாய் நிட்டை உணர்த்திற்று:

1. விளம்பிய வகை:—78, 80, 82, 83, 84 ஆம் எண்ணுடைய பாக்களால் குறிப்பாயும் வெளிப்படையாயும் உணர்த்தப்பட்ட வகை.

2. நிட்டைமேவிடல் அரிது:—உண்மை நிட்டையை அடைதல் அரிதே, எளிதன்று. ஆயினும் உண்மை நிட்டையைப் பெறும் உபாயம் அறிந்து, உண்மை நிட்டையை அடைதல் எளிது.

3. முன்னம் அளந்து அறிவு அளித்தவை:—பாச ஞானத்தைக் கொடுத்த தத்துவங்கள். அவை ஏகதேச ஞானங்களாதலின் அளவுக்குட்பட்டன.

4. அவற்றின் அளவுணர்தல்:—இருவினை யொப்பும், மலபரிபாகமும், சந்திநிபாதமும் எய்திய இடத்து, ஆன்மா தனக்கு வந்த கருவிஞானங்களை மாயா காரியங்களைக் கொண்டறிந்தன என்றும், அவை சடம்பற்றி வந்தன என்றும், தனக்கு அந்நியமாகும் என்றும், அவ்வுணர்வும் திருவருளால் வந்ததென்றும் உணர்தல். இது பாச ஞானத்தை அறிந்து நீக்கற்பொருட்டு.

5. அவற்றால் உளங்கொளும் தன்னையுணர்தல்:—அக்கருவிகளைப்போலச் சடமாகாதும் திருவருளைப் போலப் பேரறிவாகாதும் சத சத்தாய், சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறிந்த அறிவுதான் (ஆன்மா) என்றுணர்தல். (புருடதத்துவம் சார்ந்ததன் வண்ணமாய்ச் சித்த சித்து எனப்படும். சைவரில் ஒருசாரார் உயிர் சித்தசித்து என்பர். அது பொருந்தாது. சித்தியார் - சுபக்கம். 159, 204. உரை பார்க்க.) இது பசுஞானத்தையும் பசுவையும் உணர்ந்து நீங்கற் பொருட்டு.

6. உள்ளபடியை உற்றுணர்தல்:—"எவ்விடத்தும் இறையடியை இன்றி அமைந்து ஒன்றை அறிந்து இயற்றியிடா"மையை அருளால் உயிர்கள் உற்றுணர்ந்து நிற்றல்.

7. செவ்வே உவத்தல் :—முதல்வன் உபகாரத்தை இடையீடின்றிக் கருதிப் பேரன்பு செய்தல்.

8. தளர்ந்திடாமை —திருவருள் அநாதியே வேரற நின்று சடத்துக்குத் தொழில் ஆற்றியும் சித்துக்கு அறிவுணர்த்தியும் உடனிற்றலை இடைவிடாதறிதற்கண் சலித்து, ஞானமும் கிரியையும் புறப்பொருள்களில் முனைத் துச் செல்லாமை.

9. அத்தன்மையதாதல் - முற்கூறிய நிட்டையுறுதல்.

உற்றுணர்தற்கும் உய்த்துணர்தற்கும் வேறுபாடுண்டு.

பாவிக்கின் மனாதி வேண்டும் பயனிலை கரணம் நீத்துப்
பாவிப்பன் என்னின் என்ன பழுதுள பாவ கத்தாற்
பாவிக்க ஒணுஞன் என்று பாவிப்பன் என்னின் நீ என்
பாவிக்க வேண்டா ஆண்ட பரனருள் பற்றி ஞேர்க்கே. (அ ௬)

என்பது அந்தக் கரணங்களை இன்றியமையாத பாவனை சந்தாகாது அசத்தாய் முடிவதாற் பயனில்லை. அக்கரணங் களை நீக்கிப் பாவிப்பேன் என்னில் அது கேவலமாதலிற் பழுதாம். பாவனைக்கு எட்டாத பொருள் என்று பாவிப் பேன் என்னில் நீ அப்பாவனையில் நீங்காதிருக்கின்றாய். ஆதலின் தற்போதம் என்றுணர்க. குருவருள் பெற்றுச் சோகம் பாவனையைத் தலைக்கூடியுள்வர்கட்கு இவ்வாறு பாவிக்க வேண்டா என்பதாம்.

1. அந்தக் கரணத்தாற் பாவித்தல்.

2. அவற்றை நீக்கிப் பாவித்தல்.

3. பாவனைக் கெட்டான் எனப் பாவித்தல் மூன்றும் முறையே அசத்தும், கேவலமும், தற்போதமும் ஆதலையும் குருவருளாற் சிவோகம் பாவனை எய்தியவர்க்கு அவை வேண்டாமையையும் உணர்த்திற்று இது. இம்மூன்றி னுள் முன்னிரண்டு பாவனையும் சாதனத்தை நோக்கியவை. பின்னது சாத்தியத்தை நோக்கியது.

கரணாதீதனைக் கரணங்களைக்கொண்டும் விண்டும் பாவித் தல் இயலாது. கரணாதீதன் என்று பாவித்தலும் பொருந்

தாது. காணங்கொண்டது சகலம் விண்டது கேவலம். மூன்றுவது (தற்போதம்) சகலத்தை நீங்காதே சுத்தத்தை அடைந்ததாக் கொள்ளும் போலி நிலை.

'பாவிப்பதென்னிற் பாவம்' எனத் தொடங்குஞ் சிவ ஞான சித்தியாரின் செய்யுளையும் 'பாவகமேற்றுன சத்தாம்' என முதலுஞ் சிவஞானபோத வெண்பாவையும் இங்குப் பொருத்தி நோக்குக.

அவனருளாலே அவ்வருளையே கண்ணுகக்கொண்டு காண்பவர்க்கு ஒருபாவனையு வேண்டா என்றவாறு.

ஒன்றிரண் டாகி ஒன்றின் ஒருமையாம் இருமை ஆகி
ஒன்றின் ஒன்றழியும் ஒன்ரு தேன்னின் ஒன்ருகா தீயின்
ஒன்றிரும் புகழின்அன்ரும உயிரின்ஐந் தோழிலும்வேண்டும்
ஒன்றிநின் றுணரும் உணமைக் குவமை ஆணவத்
[தோடோன்றே. (அஎ)

என்பது, (1) எங்கும் ஒரு முதலாக விரிந்திருக்கும் பிரமம் சீவான்மாவாக விரிந்து மீளவும் ஒன்றுபட்டுப்போம் என்னில், அது ஜீவான்மாவான அவதாரத்தில் அப்பிரமத்தின் செயல்கள் எல்லாம் உண்டாதல் வேண்டும். அவ்வாறின்மையால் அது பொருளன்று. (2) ஆன்மாவும் சிவமும் அநாதியே இரண்டு முதலாய் நின்று முத்தியில் ஒன்றுய்விடும் என்னில், ஆன்மா அழிவதாய்விடும். விடின், (பேறு வேறு பெறுவான் வேறு என்ன இடமில்லை.) பெறுவான் இல்லையாம். ஆதலின் அதுவும் பொருளன்று. (3) ஆன்மாமுத்தியிலும் சிவத்தொடு கூடாது இரண்டுபட்டே நிற்கும் என்னில் முத்தியில் ஒன்றுபட்டு அநுபவிப்பதே பயன் என்னும் பேறு இல்லாமற்போம். (4) தீயைச் சேர்ந்தே இரும்பும் தீயானாற்போல ஆன்மாவும் சிவத்துடன் கூடிச் சிவமயம் என்னில், அவ்வாறு ஆகாது. என் எனில், ஆன்மாவிற்கு ஆன்மாவாய் நின்று சேட்டிப்பிக்கின்ற சிவனுடைய தொழிலைந்தும் (பஞ்ச கிருத்தியமும்) அச்சிவமான ஆன்மாவுஞ் செய்தல்வேண்டும். ஆன்மாக்களுக்கு ஐந்தொழில் புரியும் ஆற்றல் இல்லையாதலின் அதுவும் பொருளன்று.

மற்று, ஆன்மாக்கள் சிவனைப் பெற்று நிற்கும் முறைமை எங்ஙனம் என்னில், ஆன்மாச் சிவத்தொடுங் கூடி முத்தியைப் பெற்றுப் பேரின்பம் நுகரும் முறைமைக்கு உவமை, அநாதியே ஆணவ மலத்தொடுங் கேவலத்தில் ஒன்றுபட்டு அழியாமலும் இரண்டுபட்டு நீங்காமலும் நின்ற முறைமையே ஆகும் என்பதாம். இதனால், மாயாவாதி, சைவர், ஐக்கியவாதி, சமவாதி கொள்கையை மறுத்துச் சித்தாந்த வுண்மையை ஓரொப்புரைத் துணர்த்தியவாறறிக.

இதற்கு மதுரைச் சிவப்பிரகாசரும், இலக்கணம் சிதம்பரநாத முனிவரும் எழுதிய வுரைகளை உணர்தல் நன்று, இன்றும் என்ற பாடம் பின்வந்ததென்று தோன்றுகின்றது. இங்ஙனம் உண்மை ஞானத்தைப் பெற்ற ஆன்மாக்களிடத்தில் உள்ள ஆணவ மலம் அழியுமோ அழியாதோ என்ற வினவிற்கு மேல் விடையிறுத்தல் காண்க.

அழிந்திடும் பாசம் என்னின் நித்தம்என்றுரைத்தல் வேண்டா
அழிந்திடா தென்னின் ஞானம் அடைவது கருதவேண்டா
அழிந்திடும் சத்திநித்தம் அழிந்திடா தொளியின் முன்னர்
அழிந்திடும் இருளும் நாசம் அடைந்திடா மிடைந்திடாவே.

என்பது, சித்தாந்த முத்திநிலையில், ஆணவமலம் அழிந்துபோம் என்றால், முப்பொருளும் நித்தியம் என்பது கூடாது. அழியாதென்றால் சிவனருளைப் பெறுதல் என்பதை நினைப்பதும் கூடாது. மற்றழிவது யாதோ என்றால், ஆன்ம ஞானத்தை மறைக்கின்ற (அவிவாணவ மலத்தின் காரியமான) சத்தியே அழிந்துபோம். அதனது நித்தியத்துவம் அழியாது. அஃது எதுபோலும் என்றால், கதிரவனொளி முன்னர் நில்லாத இருள் அழிவதுமில்லை. அவ்வொளி முன்னர் முனைத்து நிற்பதுமில்லையாம் உண்மை போலும் என்பதாம்.

'ஒளி' என்பதற்கு விளக்கென்றுருமுளர். சிவனைச் சார்ந்த ஆன்மாவைப் பற்றிய ஆராய்ச்சியாதலின் அது பொருந்தாது. சிவனையும் சிவசக்தியையும் திரோதான சத்தியையும் முறையே கதிரோன், கதிரொளி, விளக்கொளி

போல்வன என்னும் மரபுணர்க. சிவஞானபோதத்தில், 'கதிர் முன் இருள்போல மாறு அசத்தின்மை அருக்கன் நேர் நிற்பினும் அல்லிருளே காணார்க்கு இருட்கண்ணே பாசத்தார்க்கு ஈசன்' என்றும், சிவஞான சித்தியாரில், 'முனைத்திடாத சத்துச் சத்தின் முன் இருள் இரவி முன்போல்' 'அருக்கன் புகுத இருள்போம் அடியிற் பொருந்த மலம் போம்', 'அந்தகருக் கிரவி இருளாகும்', 'கண்கட்கிருளினை ஒளியாலோட்டும் இரவியைப்போல ஈசன்' என்றும், இச் சிவப்பிரகாசத்தில், 'இருள் நணி இரவிதான் வந்திருந்தலும் ...அருளையும் ஒழிய...அறிந்தவாறறியும்' என்றும் அருளிய வாற்றால் விளக்கெனல் பொருந்தாமை உணர்க. மாயையைச் சோதி என்றதால் அதையுங் கொள்வாருளரோ? பின் 'ஞானத்தழல்' என வருதலின் தீயனலும் ஏற்குமோ? இருளை மதி துரந்தவா றென்றலின் மதியும் ஈண்டுப் பொருந்துமோ? (துகளறுபோதம் பா. 28, 30, 45 பார்க்க.)

ஆணவம் அழிந்த தென்னிற் சற்காரிய வாதத்திற்கு இழுக்காய் முடியும். அழிந்திலதெனில், 'ஞானம் பெருகி நாயகன் றன்பாதம் பெறுவது சுத்தம்' என்றும் சித்தாந்தத்தொடு முரணும். ஆணவமலம் பற்றறக் கழியுமாறுணர்த்திற்று இது. மேல், கன்மமலம் பற்றறுமாறுணர்த்துகின்றார்.

எல்லையில் பிறவி நல்கும் இருவினை எரிசேர் வித்தின்
ஒல்லையின் அகலும் என்ற உடற்பழ வினைய தூட்டும்
தொல்லையில் வருதல் போலத் தோன்றிடு வினைய துண்டேல்
அல்லொளி புரையும் ஞானத் தழலுற அழிந்துபோமே. அகூ

என்பது (1) அளவில்லாத பிறவியைக் கொடுக்கும் அறம் மறம் என்னுஞ் சஞ்சித கன்மம் வறுத்த விதைபோல ஞான குருவின் கிரியாசத்தியால் அத்துவ சுத்தியோடும் விரைந்தகலும். (2) உடம்பு முகந்து கொண்ட இன்பம் துன்பம் என்னும் பிராரத்தகன்மம் (அத்துவசுத்தியின் பின்னர் உடல் வசமாய் உயிர் நின்று ஏகதேசக் காட்சியிற் பொருந்தும் இன்பத் துன்பங்களை அறியாமல், பரமேபார்க்கும் பரிபூர்ண

ஞானத்தவர்க்குப் புசிப்பாகாது. அவாது) உடலுக்குப் புசிப்பாய் அதை ஆர்ச்சிப்பார் சந்நிதியில் ஒழியும். (3) இவ் விருவகைக்கும் முதலாய் முன்பு உண்டாகிய முறையிலே நாசோற்பத்தியாம் வினையும் நல்வினை தீவினை என்னும் ஆகாமிய கன்மம் உளதேல் ஒளி (முன்) இருள் நீங்குவதுபோலும் படி ஆன்மாவினிடத்தில் ஆசாரியனருள ஞானத்தீ வந்துறலால் அழிந்துபோகும் என்பதாம்.

வினையைச் சஞ்சிதம் பிராரப்தம் ஆகாமியம் என மூவகையாக்கிக் கூறுதலின், பிராரப்தத்தைப் பன்மையாகக் கொள்ளல் பொருந்தாது. திருவிளங்கம் எழுதிய உரைப் பதிப்புள் 'வினைகள்' என்றது அநாதார பாடம்.

'ஞானத்தழல்' என்றது ஞானகுருவால் சிவனுக் குண்டான சிவஞானத்தை, ஏகனாகி இறைபணி நிற்றற்கண்ணது அவனருளை யல்லது ஒன்றனையுங் கருதாதவராய்த் தம்மை இழந்து நிற்றல். அவர்மாட்டு அஞ்ஞானகன்மம் பிரவேசிக்க மாட்டாது. அவர்பால் எழுந்த ஆகாமிய வினை அவரைச் சாரமாட்டாது. அவர்க்கு இதமகிதங்களைச் செய்வீர் பிறர் உளராயின் அவற்றிற்குத் துணையாய்த் தலைக்கூடற்பாலது, முந்தனுடைச் செயலென்று முடித்தொழுகும் அவர்மாட்டு அவ்வினை மூளாது.

'முற்செய் கன்மத்
துகள் அறுத்தங் கத்துவாத் துடக்கறவே சோதித்
தேன்றவுடற் கன்மம் அநுபவத்தினால் அறுத்திங்
கினிச்செய் கன்மம் மூலமலம் ஞாலத்தால் இடிப்பன்'

என்பது சிவஞான சித்தியாகிய சிவாகம வசநம். 'என்ற' என்பதற்கு 'உடம்பு முகந்துகொண்ட' என்று ஆசிரியர் சிவஞான மாமுனிவரும் அவர் வழிவந்த சிந்தனையுரையாசிரியரும் எழுதியருளினர். 'எடுத்த உடல்' என்றதும், 'முதல்வன் ஏன்றுகொண்ட உடம்பு' என்றதும் பிறர் உரைத்தவை. பழவினை யூட்டத்தில் ஞானாசாரியர்க்குத் தானஞ் செய்யப்பட்ட உடமபு கொள்ளப்பட்டது.

(தொடரும்)

4. சமயப்பகுதி

1. எடுத்தபொற்பாதம்

(வித்துவான் தி. மு. சங்கரலிங்கம்)

தாவிப் படரக் கொழு கொம்பின்றித் தவிக்கும் ஒரு பச்சிளங் கொடியானது கொழுகொம்பு கிடைத்தவுடன் எவ்வளவு பரவசமுற ஏறிப் படர்கிறதோ அதுபோல

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்...

என்ற மணிவாசகப்படி ஆன்மா பலவிதத்தும் துன்புற்றுப் பின் கிடைத்தரிதான மானிடப் பிறவியை எடுக்கிறது; அஃது அப்பிறவியில் "சென்றவிடத்தாற் செலவிடா தீதொரீஇ நன்றின் பாலுய்ப்பதான ஆறறிவுடன் வாழ வேண்டும். கடலிடைப்பட்ட காகம் போலத் தவித்த ஆன்மா நல்வழியில் நிற்க இறையடி தொழவேண்டும். துன்பக் கடலிடை சுழன்ற ஆன்மா துன்பங்கள் நிறைந்த மானிடப் பிறவியை எடுத்தவுடன் ஓரளவு இன்பமென்றெண்ணிக் குளிக்கப் போய் சேறு பூசிக்கொள்வதை ஒப்ப நன்னெறிதேடச்சென்று தீயவழியிற்போய் அரியமனிதப்பிறவியைப் பாழாக்குகிறது அங்கணத்துள் கொட்டிட்ட அமிழ்து போல. வகையுடன் வாழவசதி யிருந்தும் வகையின்றி வாழ்ந்து வளத்தைக் கெடுக்கிறது விழலுக் கிறைத்த நீர் போல.

" தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது "

என்று அவனடிக் குவமை ஏது என்று வாதாடுகிறார் வள்ளுவப் பெருந்தகை. துன்பம் நிறைந்த வாழ்வில் இறையடி

செல்லும்வரைத் துன்பம் ஒருவனை விட்டு நீங்காது வறிய வன் வயிற்றுப் பசிபோல. இறைவனடியோ இன்பமானது. நிறைந்த வெய்யிலில் அலைந்து வீணுவாரத் வெம்மையை மரம் ஒன்று தண்ணிழல் தந்து தணிப்பது போல பிறவி என்னும் வன்பாற்கண் அலைந்து காற்றுடிபோல் உழலும் ஆன்மாக்கட்குக் குளிர்ச்சியைத் தந்து – இனிமையை ஈந்து அளிசெய்வது ஆண்டவன் பாதம் என்ற அருண்மிகு தண் ணிழல். ஏனைய மரத்தின் நிழல் காலமாறுபாட்டில் ஓரிடம் தனிலே நிலைநில்லா துருண்டோடி ஒரோகாலத்தில் ஓரிடம் நின்றுதவும். அதுபோலின்றி இறைவன் திருவடி நிழல் பரந்து பட்ட இவ்வுலகிலுள்ள பண்பமை யடியார்களைத் தாமே தடுத்தாளும் தன்மையது பால் நினைந்தூட்டும் தாய் போல. இதனை சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு வழுத் தல் காண்க. என்றும் நிலைத்த ஆண்டவன் திருவடித் தண் ணிழலை ஏனைய மரத்தின் நிழல்போலாம் என்றெண்ணி விடுவரேல் அப்பிறவி கல்லார் கட்பட்ட திருவென அழியும் என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

அடியவர்க்கினிய அருள் புரியும் ஆண்டவன் அடிநிலை அறிந்த சிலர் அவனருளைப் பெற ஐம்புலனடக்கி,

“ காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக,
வாய்மையே தூய்மை யாக மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்,
பூசனை ஈசனார்க்கு...”

மனத்துக்கண் மாசிலனாய் வழிபாடு செய்து வளமுடன் வாழ்ந்தனர். இதனால் பெறற்கரிய பேரின்ப வாழ்வுடன் பேரருள் ஒளியைப் பெற்றனர்.

ஆண்டவன் அடியின் அருமையினை உணர்ந்து இவ் வண்ணத்தது ; இத்தன்மைத்து என்றுகூற முடியாது எனி னும் சிற்றின்பத்தையே பேரின்ப மென்றெண்ணிப் பேணும் நம்மவர்கட்குச் சிற்றின்பப் பொருள் மூலமாகவே பல உதாரணங்களைக் கொடுத்து விளக்குவதில் முன்னோர் கள் தவறியதில்லை. “ இதுவே பேரின்பம் ; இணையில்லா தது என்று எண்ணும் மானிடரே ! இதனைவிட இனிது

அவனது நிழல்'' என்ற முறையில் பல்லாயிரக் கணக்கிற் பைந்தமிழ்ப் பாடல்கள் பகர்ந்துள்ளனர். ஏன்? இதோ பாருங்கள் ஒரு பாடலை ;

மாசில் வீணையும் மாலை மதியமும்,
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே'' (அப்பர் தேவாரம்)

என்பது.

ஆண்டவன் ஆடும் அம்பலத்தே சுந்தரர் செல்கின்றார். இந்து வாழ் சடையான் எடுத்த பொற்பாதத்தைக்கண்டார். ஐந்து பேரறிவையும் கண்களே கொண்டது ; கரணங்கள் நான்கும் சிந்தையைப் பற்றியது. முக்குணங்கள் ஒன்றி சாத்துவிகத்தைப் பற்றியது. கண்டு வணங்கினார் ; இன்னருள் நிறையப் பெற்றார் இணையில் புகழ்ச் சுந்தரர் என்பதை,

ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்து விகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியுண் மலர்ந்தார். (தடுத்தாட்-106)

என்று வரலாற்றோடு கூடிய இலக்கியமான பெரிய புராணத்திற் சேக்கிழார் குறிப்பிடுகிறார். நோயினால் வாடி வருந்தும் ஒருவன்,நோயைத் தீர்க்கும் மருத்துவனை நாடித் தேடி அம் மருந்து பெற்றுண்டு தன்நோயை ஒழித்துவிடுவது போலு பல பிறவி எடுத்து வாடும் ஆன்மா தனது பிறவிப் பிணியைத் தீர்க்கப் பிறப்பறுக்கும் பிஞ்ஞகனும் பெருமான் அடி மலர் பேணித் துதிக்க வேண்டும். அப்பொழுதன்றோ பிறப்பறும் ; பேரின்பம் வந்துறும்.

ஆண்டவன் அருள் வடிவ நிலையை அருந்தவத்தோராலும், கற்றுணர்ந்த கலைஞர், கவிஞர்களாலும், அருள்நிலை

பெற்ற அடியவராலும் பலவாறெல்லாம் பேசப்படுகிறது. அவ்வளவு கூறியும் அதன் மேன்மை ஓரளவாகுமே யன்றி முற்றுமாகா எனின் யான் எழுதுவது எத்தகைத்து? பாரதநாட்டின் பண்பிற்கணியாம் பரதநாட்டியத்திற்கே வழிகாட்டியாக இருப்பது நடராஜர் நடனக்கலை. இது போன்றநடனத்தாலன்றோ தானே இணையென எண்ணித் தலைக்குறுக் குற்ற பராசக்தி வெட்கித் தலைகுனிந்தாள் என்றுணர்கிறோம. இனி அம்பலக் கூத்தன் அருள் வடிவ நிலையைப் பார்ப்போம். ஒரு கையில் உடுக்கை, ஒரு கையில் நெருப்பு, ஒரு கையில் அருள் புரியும் நிலை, ஒருகை மடக்கிய நிலை, திருவடி இரண்டில் ஒன்று எடுத்த பொற்பாதம், ஒன்று ஊன்றிய பாதம், இடுப்பிலே புலியாடை இவைகளுடன் செப்பவளமேனியிலே வெண்ணீறணிந்து புன்னகை புரிந்து ஆடுகிறார். இதனைச் சித்தாந்த முடையார் ஐந்தொழில் புரியும் அருள் நிலையுடன் கூறுமுறையைப் பாருங்கள். கையிலுள்ள உடுக்கையின் ஒலியினால் உலக உற்பத்தி உண்டாகிறது எனவும், நெருப்பினால் சங்காரம் உண்டாகிறது எனவும், அமைத்தகரம் அருளைப் புரிகிறது எனவும், ஊன்றிய திருவடி ஆன்மாக்கள் உண்மை தெரியா நிலையில் மாயையில் மறைப்பது எனவும், எடுத்த பொற்பாதம் ஆன்மாக்கள் ஈடேறத் திருவருள் புரிகிறது எனவும் கூறுவர். என் இதோ பாடலைப் பாருங்கள்.

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் —ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு" (உண்மை விளக்கம்-35)

இவைகளைப் பற்றி விளக்கமாகக் குமரகுருபர அடிகளார் ஒரு பாடலில் நன்கு கூறுகிறார். அதாவது,

"பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பின் நானில வளாகமும்
ஏனைப் புவனமும் எண்ணீங் குயிரும்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே;

தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையும் காப்பதுன் அமைத்த பொற் கரமே
தோற்றுபு நின்றஅத் தொல்லுல கடங்கலும்
மாற்றுவ தாரழல் வைத்ததோர் கரமே
ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் மறைத்து நின்று
ஊட்டுவ தாகும்நின் ஊன்றிய பதமே ;
அடுத்தஇன் உயிர்கட்கு அளவில் பேரின்பம்
கொடுப்பது முதல்வ !நின் குஞ்சித பதமே
இத்தொழில் ஐந்துநின் மெய்த்தொழில்..."

(சிதம்பர மும்மணிக்கோவை-2)

என்பதாகும்.

பிறப்பற்ற நிலையில் வாழ்ந்து பேரின்ப நிலை எய்திட இறைவன் திருவடிகளைப் போற்றிப் பலபடப் பாடியுள்ளனர். பிறவியை அடியோடு நீங்க வேண்டிப் பணிவது மெய்ஞ்ஞானியர் நிலை. பிறவியுள்ளவரை ஆசைவிடாது. பேராசை யெனும் பிணிபட்டவுடன், அவா என்ப எல்லாம் உயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாஅப் பிறப்பீனும் வித்தாகி (குறள் 361) விடுகிறது. பிறவி யற்றாலன்றி பேரின்பநிலை எய்துதல் அரிதரிது. ஒருகால் இறைவனருளால் பிறவி எய்தின் அப்பிறவியில் அவனடியைச் சிறிது பொழுதுங்கூட மறவாதபடி அருள்புரிய வேண்டும் என எண்ணினர். இதனை

" புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும் "

" பிறப்புண்டேல் உனைஎன்றும் மறவாமை வேண்டும் "

என்றெல்லாம் ஆன்றவிந் தடங்கிய சான்றவர் பல்லோர் அகமுவந்துரைக்கும் அருண்மிகு பாடல்களால் இனிது புலனாதல் காண்க.

இன்னல் தரும் இழிபிறவியையுங்கூட இன்பத்திற்குள்ளாக்கும், இயல்பு கொண்டவிர்வது எடுத்த பொற்பாதம். இதனை யறியா மக்கள் எய்தற்கரிய பிறவியைப் பெற்று பாழாக்குகிறார்கள். இதன் உண்மை யறிவு தெரிந்துணர்ந்த மேலோரே இப் பிறவியின் பெரும்பயனைப் பெற்றவராவர்.

இறைவன் திருவடி நிலையைப் பலரும் பலவாறாக சிறப்பித்துப் பாடியுள்ளனர். எடுத்துக் காட்டாக குமரகுருபரர் கூறுவதைப் பாருங்கள்.

பதஞ்சலி முனிவர் காணும்படியாக இறைவன் செய்யும் நடனம் தூக்கிய பாதமான ஒரு காலைக் கும்பிட்டால் போதும் என்று கூறுவது போல, தூக்கிய ஒருகாலை ஒரு கையால் காட்டுவது போலவும் மற்றொரு கை இதுவே செய்க வேறொன்றும் வேண்டாம்; முத்தி எய்தலாம் என்று கூறி அமைப்பது போலவும் உள்ளது என்பதாகும். இதனை அவர் பாடல் பகரும்.

"கூடும் கதியொருகாற் கும்பிட்டாற் போதுமென
நாடும் அவியத்தை நண்ணிற்றால்—ஓடியகட்
காதனார் காணவொரு கால்காட்டி கையமைத்து
நாதனார் செய்யும் நடம்"

(சிதம்பரமும்மணிக் கோவை-30)

என்பது.

அப்பர் பெருமான் அருளிய பாடலில் இதுபோற் பல காணலாம். தனு கரண, புவன, போக வாழ்வின் மயக்கிலே ஈடுபட்டுத் தன்னை மறந்து, தன்னுமம் கெட்டு, தீய நெறியில் தலைப்பட்டு வருந்தும் மனிதப் பிறவியை அவர் வேண்டுமென்கிறார். முத்திநிலை எய்த முன்னும் முனிவர், முற்றத் துறந்த முழு ஞானியான இவர் கூறுவாரா? எப்படிப் பொருந்தும்? எண்ணலாம். அஞ்ஞான இருளை நீக்கி, மெய்ஞ்ஞான ஒளியை வளர்த்து ஆணவம், கன்மம், மாயை இவற்றினின்றும் நீக்கி அழியா இன்பத்தில் வைப்பது எடுத்த பொற்பாதமன்றோ? அத்தகைய எடுத்த பொற்பாதத்தைக் காணும் பிறவியன்றோ மனிதப் பிறவி. ஆதலால் மனிதப் பிறவி வேண்டுமென்கிறார். பிறவிச் சுழற்சியை நீக்குவது—பேரின்பத்தில் வைப்பது தூக்கிய திருவடியான எடுத்த பொற்பாதம். ஆதலின் அவரது பாடலில் "இனித்த முடைய எடுத்த பொற்பாதம்" என்றார். இதிலிருந்து தூக்கிவிடுகின்ற நிலை அறியாமையால் வீழ்ந்து வாடு

பவனைக் கண்ட விடத்துண்டாவது போலவே ஆணவ இருளில் அழுந்தி இறைவனது அடிமறந்து மயங்கிய ஆன்மாக்களையும் தூக்கி நல்வழி உய்ப்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது எடுத்த பொற்பாதம் என்ற நயம் தோன்றுகிறது. அப்பரடிகள் தில்லைக் கூத்தன் திருவுரு கண்டார். எடுத்த பொற்பாதத்தைக் கண்டவுடன் அதன் பெருமைகள் எல்லாம் மனக்கண்முன் தோன்றின. பாடுகிறார் பாட்டில் என்னை ?

" சாட எடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை
வீட எடுத்தது காலனை நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது தில்லையுட் சிற்றம் பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதமன்றே ?..."

என்று புகழ்ந்து கூறி, அப்பதமே " தம்மை ஆட்கொண்டது " என்றும் சிறப்பிக்கிறார். ஆண்டவன் அருள் வடிவ நிலையை முற்றும் உணர்ந்து பாட்டிலே அருளுகிறார் பாருங்கள் :

நீண்ட புருவமின்றி வளைந்து அழகுதரும் புருவத்தையும், பெருஞ் சிரிப்பின்றிப் புன்னகைபுரியும் கோவைப்பழம் போன்ற திருவாயையும், வெம்மை இல்லாத் தன்மையையுடைய கங்கையைத் தாங்கும் சடையையும், பால்போலும் வெண்ணீறு பூசிய பவளம் போன்ற மேனியையும், ஆன்மாக்கள் உய்ய அருள் புரியும் நிலையிலுள்ள தூக்கிய திருவடியையும் ஒருசேரக் கண்டார். உள்ளத்திலே உவகை பொங்குகிறது ; இறைவன் கடைக்கணருள் அப்பாது இடுக்கணைச் தீர்த்தது ; போகவாழ்வை வெறுத்தார். இக்காட்சியைக் காணப்பெற்றால் துன்பம் நிறைந்த இப்பிறவி கூட வேண்டுமென்று எண்ணினார். துன்பம் நிறைந்த இவ் வாழ்வுகூட இறைத் திருக்கோலம் கண்டவுடன் துன்பம் நீங்கிவிடுகிறது சூரியனைக் கண்ட பனிபோல. இன்பம் வந்து இடையீடின்றி நிறைவு பெறுகிறது அனலிற் பட்ட நீர் போல என்பது அவர் கருத்தாகும். அவரது அனுபவப் பொருள் நிறைந்த ஆனந்தப் பாட்டைப் பாருங்கள்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய **எடுத்தபொற்பாதமும்** காணப்பெற்றல்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மானிலத்தே"

(அப்பர் பாடல்)

என்பது.

இவ்வாறு பல்லோராலும் பகுத்துணர்ந்து பாடிப் பயன் பெற்ற பண்பமை திருவடியாம் எடுத்த பொற் பாதத்தை நாளும் இடைவிடாது மனதில் நினைத்து நிறுத்தி அவனருளைப் பெற்று என்றும் நிலைத்த பேரின்ப வாழ்வு பெற்று வாழ்வோமாக.

---

2. சமயப்பற்று மாணவர்களுக்கு இன்றியமையாததா?

(திருவண்ணாமலை அ. தா. ப. திருஞானசம்பந்தம்.)

இத்தகையதொரு சிறந்த கேள்வி இன்று தமிழகத்தில் உள்ள ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டிய ஒன்றாக அமைகிறது. காரணம் இதனால் நாட்டிற்குப் பெருநலன் விளையும் என்பதே! சிந்திக்காதுவிடின் நாடு பாழ்பட்டுக் காடாய் காட்சியளிக்கும். மேற்கண்டதோர் வினாவை எழுப்பி விடை என்ன? என்று காண்பதற்கு முன் சமயம் என்பது என்ன? பற்று என்பது என்ன? மாணவர்கள் என்போர் யார்? என்ற வினாக்களுக்கு விடையறிதல் நன்று.

சமயம் அல்லது செந்நெறி:—சமயம் என்பது மனிதன் எண்ணங்களைச் சிறைப்படுத்தி, அடிமை வாழ்விற்கு அழைத்துச் செல்வதல்ல. அதேநேரத்தில்தான் எண்ணியபடியெல்லாம் சிந்தனை செய்து, கெட்ட வழிகளில் செல்வதைத் தடைப்படுத்தி, வாழ்தற்குரிய நல்வழிகளைக் காட்டி, அவ்வழியில் செல்க என இயம்புவதே சமயம். "பொய்யாமை, பொய்யாமை யாற்றின், அறம்பிற செய் செய்யாமை செய்யாமை நன்று என்பது உலகப் புலவர்

திருவள்ளுவரின் திருவாக்கு. இவ்வுண்மையை வலிய அறிவித்து, உண்மையைப் புகட்டுவதே சமயம். யாதொன்றும் தீமையிலாது சொல்லப்பழகி வாழ்தலே வாய்மை. அவ்வழிநிற்றலேசாலவும்பொருத்தமுடைத்து என்றறிவிப்பதே சமயம். தான் மட்டில் வாழவேண்டும் என்ற பாழ்த்த எண்ணத்தைப்போக்கி, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பவேண்டும்; அங்ஙனம் வாழ்தலே அறமாகும் என்று இயம்புவதே சமயம். தன்னகத்தே தத்துவங்கள் பலகொண்டு, உலகவர்க்கு உரைகற் பொன்னெனக்காட்டி உணர்வதைத் தட்டி எழுப்புவதும் சமயமே! இத்தகைய சமயம் மிகவும் வேண்டற்பாலதன்றோ! நாட்டிலே சமயம் பல்கித் தழைக்கவேண்டும்; ஓங்கி வளம்பெற்றுத் திகழவேண்டும் என்று விழைந்த பெரியோர்கள் பல்லோர். சீர்மைசால் கருத்துகள் மக்கள்பால் விளங்கவேண்டும் என்று ஆசைபட்டுச் சொல்லொணுப் பாடுபட்டு, எண்ணிய எண்ணம் ஈடேறுது நிற்க மனம் வருந்தி மாண்ட பெரியோர்களும் பல்லோர். அத்தகையதோர் பெருமை பொருந்திய சமயத்தை வரம்புகட்டி இகழத் தலைப்படுவோர்களும் தோன்றுகின்றூர்களெனின், வருந்தவேண்டிய நிலையல்லவா பிறக்கிறது? சமயத்தின் அடிப்படை உண்மைகளை உணருவரேயாயினும், அங்ஙனம் பேசத் தலைப்படார் என்பது ஒருதலை.

பற்று இன்றியமையாததா? :—சந்தேகமே வேண்டாம் பற்று இன்றியமையாததுதான்! உலகம் பற்றுக்கோட்டினுல்தான் இயங்குகிறது. ஈண்டு உலகம் என்பதை இடவாகு பெயர் எனக் கொள்ளினும் நலம். பற்றின் விளைவுதான் மனிதனைப் பொருளீட்டவும், நன்கு வாழவும் செய்விக்கிறது. மனிதன் எங்கு கண்டாலும் பற்றுள்ளம் படைத்தவனுகத் திகழ்கிறுன். இயற்கையின் தோற்றத்திலேயே தாய்க்குச் சேயின்பால் பற்றும், தலைவிக்குத் தலைவன்பால் பற்றும் விளைகிறது. படருங் கொடியும் பற்றுக் கோட்டினுல்தான்செழித்துவளரமுடிகிறது. எனின் பற்றுப் பொது வகையிலோ, அன்றிச் சிறப்பு வகையிலோ காணுங் காலத்து, உலகவர்க்கு இன்றியமையாத தொன்றெனை அறிய

முடிகிறது. இருப்பினும் பற்று இரண்டு வழிகளில் பிரிந்து செல்லும் என்பதும் உணரற்பாலது. 1. நிலையற்ற பொருள்களின்பால் பற்றுள்ளங்கொள்ளுதல். 2. நிலையுள்ள பொருள்கள்பால் பற்றுள்ளங் கொள்ளுதல் என்பவையாம். முன்னதை உலகிடை வாழ் மக்கள் அனைவருமே விரும்பி ஏற்பதாம். பின்னதோ மிகுதியாக துறவிகளுக்கு ஏற்புடைத்தென்று ஒதுங்கியே நின்றுவிட்டது. அதை அங்ஙனம் கொள்வது பொருத்தமெனினும், உலகவர்க்கும் அதில் சிறிது நாட்டம் இருப்பின் இறையருளில் தோயவழி பிறக்கும். நிலையுள்ள பொருள்களை அனுபவிக்கும் காலத்தே அறிவு பெற்றதின் பலனை ஒருவன் அடைந்தான் என சொல்வதற்கு வழியுண்டு. உலகப்பற்றை நீத்தகாலத்தே ஒருவன் "அற்றது பற்று எனில் உற்றது வீடு" என்ற மறைமொழியாளர் வாக்கிற்கு இலக்காவன். உலகப்பற்றை நீத்து வாழவேண்டும் என்று எந்த நீதி நூலும் உண்மை புகட்டவில்லை. எல்லாப் பொருள்களின்பால் பற்றுள்ளம் கொண்டு விளங்குங் காலத்தே, பெறுதற்கரிய பிரானின் திருவடிப்பேற்றை மறந்தால் அந்தோ! வாழ்வு பாழ்படும் என்றே நூல்கள் எச்சரிக்கின்றன அல்லவா? அதனால் பற்றறுக்கும் பெருமானின் கழல்களை வழிபடுதல் இன்றியமையாதது என்று உணரல்வேண்டும். உலகப் புலவர் வள்ளுவரின் கூற்றை ஓர்க.

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு? (மெய்யுணர்தல் - 14)

எல்லாப் பொருள்களையும் பற்றி நின்றே அப்பற்றை விட்டு நீங்கிய இறைவன் அருளிச் செய்த வீட்டு வழியை, இதுவே நல்லவழி யென்று உறுதியாகமனத்துள்ளே பற்றிக் கொள்ளவேண்டும் என்பதே வள்ளுவப் பெருந்தகை யாரின் குறிக்கோள். தெய்வப்புலவரின் வாக்கினை நுண்ணிதே தெளிந்தாய்ந்த மாணிக்கவாசக அடிகளாரும் "பற்றேது மில்லாதேன் பற்றற நான் பற்றி நின்ற மெய்த் தேவர் தேவர்க்கே சென்றூதாய்க் கோத்தும்பி!" என்

கிறார். மெய்த் தேவனை நாடி, அவனை வழிபாடியற்றும் பெற்றியை அனைவரும் பெற முயலுதல் வேண்டும். இத் தகைய பேருண்மைகளை அறிவிப்பதே சமயமாக அமை கிறது. உயர்ந்த தத்துவங்களை அறிந்த பெரியாரோர் இளைய உள்ளங்கள் பெற்றமாணவர்களுக்குச் சமயம் பற்றிய சிறந்த உண்மைகளை எளிய முறையில், விளங்கிக்கொள் ளும் வகையில் எடுத்து இயம்பி வரவேண்டும். இன்றேல் சமயம் மங்கும் விளக்காக மாறும்.

மாணவர்கள் யார்? இதுவும் அறிந்து தெளிய வேண்டிய கேள்விதான். இக்கேள்வியை இலக்கண ஆசிரிய ரான பவணந்தி முனிவரிடம் சென்று கேட்டால், வான் முறை செய்து கூறுவார். மாணாக்கன் என்பான் பொழு தொடு ஆசிரியரிடம் சென்று, வழிபட்டு நின்று நற்குணத் தொடு பழகி, ஆசிரியன் குறிப்பு வழிநின்று ஆசிரியன் அமரச் சொல்லிய பிறகு அமர்ந்து, அவர் கூறியவற்றைச் சொல்லெனக் கேட்டபொழுது சொல்லி, ஆசிரியப் பெரு மகன் பாடங்கூறுங்கால், சித்திரப் பாவைபோல் அமர்ந்து, செவி வாயாகவும், நெஞ்சு கருத்துக்கள் தங்கும் வயிறாகவும் பெற்று கேட்ட நற்கருத்துக்களை விடாது உள்ளத்தமைத்து, ஆசிரியன் சொல்லென்ற பொழுது சொல்பவனே யாவன். மற்றும் மாணாக்கன் என்பவனோ வழக்கறியவேண்டும்; பாடம் போற்றல் வேண்டும்; ஆசிரியன் கூறியவற்றை அமைவாக் கற்கவேண்டும்; நல்ல மாண்புடைய மாணவர் களுடன் பழகி, தெரியாதவற்றைத் தெளிந்துகொள்ப வனே மாணவன் என்ற இலக்கணத்திற்கு உரியனாவன்.

தலைக்கு நறு நெய்யிட்டு மழுங்கச் சீவி தூயவெள் ளாடை யணிந்து, சுமக்க முடியாத அளவிற்குக் கையில் புத்தகக் கட்டுடன் பள்ளியை நோக்கிச் செல்பவன் மாண வன் என்பதல்ல! மாணவர்களெல்லாம் உழுதுவிட்ட நிலம் போல! உழுத நிலத்தில் எந்த வித்திட்டாலும், அதில் முளைக்கத் தகுதியாய் இருக்கும். அதைப்போல எக் கருத்தை வேண்டுமெனினும் மாணவர்கள் உள்ளத்திலே பசுமரத் தாணியென பதியச் செய்யலாம். நற்கருத்துக்

கள் அவர்களைச் சாரும்படிச் செய்தால் நற்பலன் விளையும். தீக்கருத்துக்கள் அவர்களைச் சாரும்படிச் செய்தால் மாண வர்களை அவைகள் வாட்டுவதோடல்லாது உலகைக் கேடு றுத்த மாணவர்களை ஏவவும் செய்கின்றன. நல்லவழியில் நற்கருத்துகள் பெற்ற மாணவர்கள் செல்லாவிடின் ஐயகோ! அவர்கள் வாழ்க்கை எனும் இனிய தழைத்த பூங்கா எதிர் காலமென்னும் சூறுவளிக்கு இரையாகுமன்றோ! வாழ்வு பாழாக யாரே விரும்புவர்? அறிந்தவர் விரும்பாரன்றோ? வெளுத்ததெல்லாம் பால் என்றுணரும் பளிங்கு உள்ளம் படைத்த மாணவர்கள் அறியாமை காரணத்தால் வழுக்கி வீழ்ந்து, ஒன்றுமற்ற பாழ்நிலைக்கு உலுத்தராகின்றனர். இதனைப் போக்கக் கழுவாய் என்ன என்பதை மாணவ உள்ளங்கள் உணருமேல், வாழ்க்கை ஒளிவிட்டுச் சிறக்கு மென்க! தீயனபோக்கி, நல்லன உணர உணர்த்தும் இடம் எது? அதுவே சமயம்—திருநெறி—செந்நெறி—எனலாம்.

சமயப்பற்று மாணவர்களுக்குக் குறைந்ததேன்? சென்ற சில ஆண்டுகளாகப் பெரும்பாலான தமிழ் படித்த புலவர்களிடையே கடவுட் கொள்கை தேய்ந்து செல் லாக் காசாக ஆகிவிட்டது. ஆசிரியர்கள் தன்னம்பிக்கை யோடு வாழ வேண்டும் என்பதை அறியாராயினர். அங்ங னம் தன்னம்பிக்கை இறையருட் தோய்ந்த கல்வியால்தான் பெற முடியும் என்பதை அடியோடு மறந்தனர். நிரீச்சுவர வாதம் பேசத் தலைப்பட்டு, நாத்தழும்பேறினர். இத்தகைய ஈடுபாட்டில் நின்றமையால், சிறிதளவு தங்கள் வசம் ஆட் பட்டிருந்த தன்னம்பிக்கை வந்தவழி எது என்று பார்த்து செல்லலுற்றது. அத்தகைய புலவர் பெருமக்களிடம் பயி லும் மாணவர்கள் இயல்பாகவே எப்படியிருப்பார்கள் என்று வாய்விட்டுச் சொல்லி எழுதவாவேண்டும்?" விரை யொன்றிட, சுரையொன்று காய்க்குமோ? எனும் மொழியை எண்ணிப் பார்த்தல் ஈண்டு நலமுடைத்து. மாறுபட்ட கொள்கைகள் நிலவ ஆரம்பித்த ஞான்று ஒன் றைப்பற்றி ஏனென்று கேட்டு உண்மை ஈதென ஆராயும் வழியும் மாய்ந்தது. எல்லாம் நாம் அறிந்ததே என்ற போலி

அறிவால் அவர்கள் மூழ்கடிக்கப்பட்டனர். முடிவு சொல்லொணாத பாதக நிலைக்கு அழைத்துச் சென்றுகொண்டிருக்கிறது. இந்நிலை நீங்க வேண்டாமா?

மாணவர்களுக்குச் சமயப்பற்று: பறத்தல் எப்படி பறவையின் இயற்கையோ, புளித்தல் எப்படி புளியின் இயற்கையோ, கசத்தல் எப்படி வேம்பின் இயற்கையோ, அஃதேபோல் சமயப்பற்றுடன் விளங்கவேண்டுவதுதான் மாணவர்களுக்கு இயற்கை! புளி கசக்க வழியில்லை! வேம்பு இனிக்க வழியில்லை! அங்ஙனம் மாறுபட்ட சுவை தட்டினால், அவை கெட்டுள்ளன என்பதை அறியலாம். உள்ள சுவை உள்ளபடியிருக்குங் காலத்து, அதைப்பற்றி சிந்திப்பார் யார்? அதுமாறுபடுங் காலத்து தாவரநூல் வல்லாரும் அதுபற்றிச் சிந்திக்க முனைவர். அதுபோல இன்று மாணவர்களுக்குச் சமயப்பற்றுக் குறைந்ததின் காரணம் என்ன என்பதை சித்தாந்திகளானோர் ஆய்ந்து அதற்கு ஆவன செய்ய முற்படல் வேண்டும். இன்றேல் சமயம் மேடைக்குப் பேசும் பொருளாய் அமையுமோ என்று ஐயுற வேண்டியுளது.

வருணாச்சிரமங்கள் நான்கு எனப் பகர்வர் அறநூல் வல்லார். அஃதாவது, பிரம்மச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பவையாம். முன்னிரண்டும் உலகியற் பொருள்களில் பெரிதும் உழன்று அல்லலுறுபவை. மூன்றாமது இறைவழி நிற்க, உலக அவாவினை நீத்து, கானகம் ஏகுதலைச் சாரும். கடைப்பட்டது இறைவன் நிலையே சிறந்ததெனஎண்ணி அதன்பால் இடையறாத பற்றுள்ளங் கொண்டு, வேறெதின்பாலும் ஈடுபாடு கொள்ளாதிருக்கும் நிலையில் நிற்பதாம். தற்போழ்து முன்னிரண்டுடைப் பற்றிச் சிந்திப்போம். பிரம்மச்சரியத்தில், இறைவனைப் போற்றிக் கல்வியைக் கற்று, நல்லொழுக்க நெறி நின்று, அறிவைப் பேணிவளர்க்கும் சமயமாகும். கிரகஸ்தத்தில், அறவோர்க்களித்து, அந்தணரோம்பி, துறவோர்க்கெதிர்த்து, நல்லற வழி நின்று வாழும் வகைக்குச் செல்வதே ஒருவர்க்கு நெறியாகும். இதுபொழுது கண்ட இருபகுப்பில் உள்ளார்

உலகியற் பொருள்கள்பால் பற்றுள்ளங்கொண்டு வாழ்பவர்கள். சிறப்பாகப் பிரம்மச்சரியத்தில் வாழும் மாணவன் அறிவின் துணைகொண்டு, அது நேரம் வாழக்கடமைப்பட்டுள்ளான். அறிவுக்குத்துணை செய்வது எது? இயற்கை என்று கூறினும் சரி; சிவன் என்று கூறினும் சரி; திருமால் என்று கூறினும் சரி. ஆக ஒரு பொருளின் பெருந்துணை தேவைப்படுகிறது. உண்மை யுணர்ந்த தாயுமானாரும் "அறிவான தெய்வமே - தேசோமயா னந்தமே" என்றே இறைவன் புகழைப் பாடிப் பரவுகிறார். எனில் அறிவுக்குத் துணைசெய்வது அறிவுத் தெய்வம் என்பதில் எள்ளளவும் சந்தேகம் பிறக்க வழியில்லை. அறிவுப்பாதையில் செல்லும் மாணவனுக்குத் துணைசெய்வதுதோன்றாத்துணையான இறைவனே யாவன்! அவனை செந்நெறி யென்னும் சமயவழியில் அமைத்து நிறைமொழியாளர்கள், மறைமொழிகள் இயற்றி அப்பெருமானைப் போற்றலாயினர். அவர்கள் கொண்டு சென்று வழிபட்ட முறையே, இன்று நம்மிடையே சமய நெறியாக விளங்குகிறது. அறிவுக்குத் துணை புரிபவனைப் போற்றும் சமயத்தில் ஈடுபாடு கொள்ளாது வாழ்தல் நலமாமோ? மாணவர்களே!

உலகையாக்கும் சிற்பிகள் யார்? மாணவர்கள்தான்! அழிக்கும் தோன்றல்கள் யார்? அவர்களேதான். மாணவர்களே! விழித்தெழுங்கள்! உங்கள் நினைவும் செயலும் இறைவன் தொடர்புடன் நிகழட்டும். இன்றேல் எல்லாவித ஊறுகளும் விளைந்து உங்கள் செயல்களைத் தடைப்படுத்தும் வேகங்கெடுத்தாண்ட வேந்தனை வழுத்தும் சமயத்தைக் கைவிட்டால் சந்தேகமற்று வாழ்க்கை பாலைவனமாகும். இன்பத்தின் ஊற்றிலே, வற்றாதநிலையில் வாழவேண்டும் என்று ஆசைகொள்பவர்களுக்கு இறைவனே பெருந்துணையாவன். அதனால் அவன் எண்குணங்களை வகுத்துரைத்து நன்றிது, தீதிது என அறிவித்து நலம்பெற வழிகளை வகுத்தளிக்கும் செம்மை வாய்ந்த சமயத்தின் பால் பற்றுள்ளங் கொள்ளாமல் இருக்கலாமா? சிந்தியுங்கள்! சிந்தனையின் முடிவில் நம்பிக்கையோடு சமயத்திலே நில்லுங்கள்!

8. விரிவுரைப் பகுதி

நாவலர் நினைவுவிழாத் தலைமையுரை

வித்துவான் - பண்டிதர் - கா. போ. இரத்தினம், எம்.ஏ., பி.ஓ.எல்.

(மலர். 26 ; இதழ்-2 ; 89-பக்கத்தொடர்ச்சி)

'கரிப்பிரவாள' நடையும், 'தஸ்புஸ்' நடையும் வேண்டாம் :—ஆனால், "தமிழை வளர்க்கிறோம், தமிழ் தமிழெனை உயிர்க்கிறோம். தமிழ்ப்பணி புரிகிறோம்" என்று கூறிக்கொண்டு தமிழைச் சிதைக்கிறவர்களை நாம் கண்டிக்காமல் விடமுடியுமா ? 'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்று கூறிய நக்கீரரைப் போற்றுகிற நாம் 'உயிர்க்குக் கெடுதி ஏற்படினும் உண்மையை உரைப்பேன்' என்று இயம்பிய நாவலரைப் பரவும் நாம் தமிழ்மொழியின் ஆக்கங்கருதி இவர்களுடைய பிழைகளை எடுத்துக்காட்ட வேண்டிய கடப்பாடுடையவர்களன்றோ !

இந்த 'நரமனிதர்கள்' ஆங்கிலம், இந்தி முதலிய பல மொழிகளின் சொற்களை ஒருவரையறையுமின்றித் தமிழிலே புகுத்தி ஒரு கரிப்பிரவாள நடையை உண்டாக்குவதன் காரணம் யாதோ ? சிறைச்சாலை, வழக்கு முதலிய சிறந்த தமிழ்ச் சொற்களிருக்க 'ஜெயில்', கேஸ் முதலிய ஆங்கிலச் சொற்களைப் புகுத்தித் 'தஸ்புஸ்' நடைக்கு ஏன் வழி காட்ட வேண்டும். போர்டு, கார்டு, இண்டர், பாரட்லூ முதலியவற்றை வலிந்து போற்றி 'அரட்டைக் கச்சேரி' ஏன் செய்யவேண்டும். தகுதியான தமிழ்ச் சொற்களிருக்கவும் வழக்கில் வந்த வடசொற்களிருக்கவும் ஜாமீன், ஜாபிதா முதலிய சொற்களை வாரி வழங்குவதேனோ ? இவற்றாற் றமிழுக்குக் 'கட்டுமஸ்தான' உடல் வந்துவிடுமா ?

ஆரியச் சொற்களைத் தமிழில் ஆளும்போது அவற்றி லுள்ள ஆரிய எழுத்துக்களை நீக்கித் தமிழ் மயமாக்கி ஆள வேண்டுமென்பதே, தொல்காப்பியர் பவணந்தி முனிவர் முதலிய பேரறிஞர் கொள்கை. இந்தக் கொள்கையினையே தமிழ்ப் பெரும் புலவர்கள் யாவரும் தழுவியுளர். இதனையே பிறமொழிச் சொற்களை எடுத்தாளும்பொழுதும் நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

இதனை விடுத்து ஆங்கிலம் இந்தி முதலிய மொழிகளின் சொற்களை மாத்திரமன்றி ஆரியச் சொற்களையும் சிலர் அவற்றின் 'தத்ரூபத்திலே' தமிழிலே புகுத்திப் புதுமை காண்கிறார்கள். 'அக்னி, ஸூரியன், இந்திரன்' என்றெல் லாம் எழுதித் தமிழ்த்தாய்க்கு 'ஹாரதி' எடுக்கிறார்கள். இது 'தித்திக்கும் செந்தமிழின் கீர்த்திக்கு' அடுக்குமா? இந்தப் புதுயுக மனிதர்கள் உண்மையை உணர்ந்து தமிழ் மரபைச் சிதைக்காமலும் நாளுக்குநாள் நூலுக்குநூல் தமது கொள்கைகளை மாற்றாமலும் உறுதிப்பாட்டுடன் தமிழ்த் தொண்டு செய்தால் நமது தமிழ் மொழி நன்கு சிறந் தோங்குமன்றோ!

பேசும் பொழுதும் தமிழ் மொழியின் இனிமை தோன்ற நாம் பேசுதல் வேண்டும். நமது வானொலி நிலையத் தமிழ் அறிவிப்பாளர் சிலர் பேசுந் தமிழைக் கேட்கும்போது 'ஆரியர் கூறுந் தமிழ்' நகைச் சுவைக்குப் பொருளாகும் எனப் பேராசிரியர் தொல்காப்பிய உரையிற் கூறுவது ஞாபகத்துக்குவரும். நிற்க.

தமிழுக்கு முதன்மை கொடுங்கள்: இப்பொழுது நாம் அடிமைத் தளையினின்றும் விடுதலை பெற்று நம்மை நாமே ஆளும் உரிமை யுடையவர்களாகி விட்டோம். நமது தாய் மொழிக்கு நமது நாட்டிலே சம உரிமை கொடுக்க முயற் சிகள் நடக்கின்றன. அதனை அரசியல் மொழியாக்கவும்

முடிவு செய்துளர். கல்வியினையும் தாய்மொழியிலேயே ஊட்ட வேண்டுமென்றும் வற்புறுத்துகிறோம். ஆனால் இப்பொழுது தானும் நமது மொழிக்கு நமது பேச்சிலே எழுத்திலே, வீட்டிலே, நாட்டிலே நாம் முதன்மை கொடுக்கிறோமா ?

தமிழ் மக்கள் ஒருவரோடு ஒருவர் உரையாடும் போதும், ஒருவருக்கொருவர் எழுதும்போதும் தமிழை மாத்திரமே பயன்படுத்துவதாக உறுதிசெய்து அதன்படி நடக்கவேண்டும். தமிழிலே எழுதும் அழைப்பிதழ்கள் அறிக்கைகள் முதலியவற்றிலே ஆங்கிலச் சொற்களையும் எழுத்துக்களையும் கலவாமல் எழுதப் பழகிக் கொள்ளவேண்டும். நமது பெயர்களைத் தமிழிலும் அவற்றிற்கு முன்னே வரும் எழுத்துக்களை ஆங்கிலத்திலுமாகக் கலந்து எழுதும் வழக்கத்தை விடுத்து அவற்றைத் தமிழிலேயே எழுதல் வேண்டும். ஆங்கிலம், யப்பான் முதலிய மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்ட மக்கள் தமது பெயர்களை இவ்வாறு இருமொழிகளைக் கலந்து எழுதுகிறார்களா ? ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்து நீங்கிய பின்னரும் நாமேன் நமது பெயரை நமது மொழியில் எழுதும்பொழுதுகூட ஆங்கிலத்துக்கு அடிமைப்பட்டவர்கள் என்று காட்டவேண்டும். தமிழிலே தந்தி அனுப்புதற்குச் சில நகரங்களிலே இப்பொழுது வாய்ப்புகள் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்துவோர் தொகை நாளுக்கு நாள் குறைந்து வருகிறதாம். என்னே நம் தமிழ்மக்களின் தமிழ் ஆர்வம் ! அஞ்சல் உறைகளிலே தமிழிலே முகவரியினை எழுதும் தமிழர்கள் எத்தனை பேர் இங்குளர். இலங்கை முழுதும் தமிழைப் பரப்ப விரும்புகிறவர்கள் இதனைத் தானுஞ் செய்தல் கூடாதா ? நிற்க.

தமிழிசையைப் போற்றுங்கள்: தமிழ்மக்கள் தமிழிசையைப் போற்ற வேண்டுமென்று அக் காலத்திலேயே நாவலர் கருதினர். சில இசைப்பாடல்களையும் பாடித் தந்த தமிழர்கள் தமிழிசையைப் போற்ற வேண்டும், தமிழ்ப் பாடல்களையே பாட வேண்டும் என்று கிளர்ச்சி செய்ய வேண்டிய நிலைமை தமிழ் நாட்டில் ஏற்பட்டது குறித்து உண்மைத் தமிழன் மானமுள்ள தமிழன் வருந்தாமலிருக்க முடியாது. தாய்மொழி அறிவு நிரம்பாத நமது குழந்தைகளுக்குப் பொருள் சிறிதும் தெரியாத தெலுங்குப் பாடல்களைத் தொடக்கத்திலே கற்பிக்கும் அறியாமை என்றுதான் முற்றுமோ? தென்னிந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள தமிழ்மக்கள் இப்பொழுது உண்மையை யுணர்ந்து தமிழிசை வளர்ச்சியில் ஊக்கங் கொண்டுளர். ஆனால் நமது கொழும்பு மாநகரில் உள்ள சில தமிழ்ப் பெரியார்கள் இன்னும் தூங்கிக் கொண்டுதானிருக்கிறார்கள். இவர்களையும் விரைவில் உண்மையை யுணர்ந்து தமிழிசை யாக்கங்கருதி உழைக்கச் செய்தல் இன்றியமையாதது.

கடைசியாக எந்த எந்தத் துறைகளில் நாம் தமிழை வளர்க்கலாமோ அந்த அந்தத் துறைகளில் அதனை வளர்த்தலும் எல்லாத்துறைகளிலும் அதற்கு முதன்மை கொடுத்தலும் நமது கடன் என்பதை நாவலரைப் போற்றும் இந்தப் புனித நாளிலே வற்புறுத்தி எனது தலைமையுரையை நிறைவாக்குகிறேன். தமிழ் வாழ்க; தமிழிசை பெருகுக; நாவலர் புகழ் ஓங்குக.

மதிப்புரை

1. தருமபுரம் ஆதீனம் 7-வது ஆண்டுஆட்சி அறிக்கை 1951—52.

இவ்வறிக்கையில் 25-வது மகாசந்நிதானம் ஆற்றிய திருப்பணிகள் 220 பக்கங்களும், அறிக்கைச் செய்திகள் 236 பக்கங்களும் ஆகமொத்தம் 456 பக்கங்களாக ஒரு பெரும் புத்தகமாக விளங்குகின்றது. சந்நிதானம் பங்கெடுத்துக் கொண்ட திருவுருவப் படங்கள் நிரம்ப இருக்கின்றன. அவர்கள் தரிசித்து வந்த கணக்கற்ற தலங்களின் விவரங்கள் குறிக்கப்பட்டுள்ளன. யாத்திரை செய்ய விரும்பும் எப்படிப்பட்ட சைவனுக்கும் அக்குறிப்புகள் மிகவும் பயன் தரும். இந்நூல் அறிக்கை என்ற எளிய பெயரில் வெளியிட்டிருந்த போதிலும் இதனை படிக்கத்தக்க ஒரு நூல் என்றே கொள்ள வேண்டும். பல பாசுர மேற்கோள்களும் இதில் அடங்கி உள்ளன.

2. திருக்கழுகு மாமலைச் சிவக்கொழுந்து மாலையும், சிவபெருமான் இரட்டை மணிமாலையும்:—ஆசிரியர் : கவி. முத்துசாமிப் பிள்ளை அவர்கள், இளசை.

இதில் இரண்டு நூல்கள் இருக்கின்றன. சிவக்கொழுந்துமாலை என்பது 10 கட்டளைக் கலித்துறைகளைக் கொண்டது. இரட்டை மணிமாலை என்பது 10 வெண்பாக்களும் 10 கட்டளைக் கலித்துறைகளும் அந்தாதி வகையில் கோக்கப்பட்ட ஒரு நூல். இவை இரண்டும் கழுகுமலைப் பெருமான் மீது பாடப்பட்டவைகள். ஆசிரியர் சங்கரன் கோயில் கணியர் புலவர் இ. மு. சுப்பிரமணியபிள்ளை அவர்களின் தந்தையாராவர். பாடல்கள் சொல்லும் பொருளும சிறந்து அன்புகனியப் பாடப்பட்டுள்ளவை. தமிழ்மக்கள் இந்நூலைப் பாராட்டிப் படிப்பார்களாக.

3. தில்லைச்சிற்றம்பலப் பெருங்கோயிலின் பழமையும் திருச்சித்திரகூட அமைப்பும் :—வில்ல அணு நான்கு. ஆக்கி

யோர் தமிழ்ப்பெரும்புலவர் சித்தாந்தப் பேராசிரியர் திருவாளர் சபா சிவப்பிரகாசம் பிள்ளை, தில்லை. வெளியிட்டோர் தில்லைத்திருமுறைக் கழகத்தார், சிதம்பரம்.

இச்சிறு நூல் சிற்றம்பலப் பெருங் கோயிலில் ஒரு சிறு பகுதியாக உள்ள திருச்சித்திரக் கூடத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமாளுக்குத் தனியாகப் பிரமோத்சவம் நடத்த வேண்டுமென்று ஒரு புது இயக்கம் தோன்றியிருக்கிறதென்றும் அவ்வாறு ஒரு திருவிழா எப்போதும் நடந்ததில்லையென்றும் இப்போது புதிதாக நடத்தினால் அமைதி கெட்டு வீண்சச்சரவுகள் தோன்றக் கூடும் என்றும் பல ஆதாரவுகளைக் கொண்டு இந்நூலில் நிரூபிக்கப்பட்டுள்ளது. நமது நாட்டில் சமயப்பூசல் இல்லாததே நல்லது. அதிலும் சடங்குகள், திருவிழாக்கள் முதலியவைகளில் பூசலேயிருக்கப்படாது. சரித்திர வரலாற்றுக்கு எதிராக உத்சவாதிகள் நடத்தினால் பூசல்தான் நேரிடும். இதனை அதிகாரிகள் கவனிக்கவேண்டித் தெளிவான காரணங்களுடன் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. பொதுமக்களும், அதிகாரிகளும் இதனைக் கவனித்துப் படிப்பார்களாக.

4. மாசிமக மலர் :—திருப்பனந்தாள் ஆதீன வெளியீடு. இதில் கும்பகோணம், கும்பேசுவார் முதலிய மூர்த்திகள், மகாமகம் முதலிய தீர்த்தங்கள் முதலியவற்றை விவரிக்கின்றது. குடந்தை தேவாரப் பதிகங்கள் இதில் உள்ளன. மேலும் திருப்பனந்தாள் ஆதீனத்தில் நாளதுவரை செய்துள்ள தர்மங்களின் அட்டவணை விவரமாக எழுதப்பட்டுள்ளது. இறுதியில் குமரகுருபர சுவாமிகள் வரலாறும், சகலகலாவல்லிமாலையும், திருவாசக சிவபுராணமும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூல் தமிழ்மக்களுக்கு மிகவும் பயன்படும்.

CONNEMARA PUBLIC LIBRARY
18 JUL 1955

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

CONNEMARA PUBLIC LIBRARY
18 JUL 1955
MADRAS

சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜம்

47-வது ஆண்டு நிறைவுவிழா, ஈரோடு

சைவர் மாநாடு

"ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே!"—சம்பந்தர்

பேரன்புடையீர்,

நிகழும் விஜய ஆண்டு, சித்திரைத் திங்கள், ௧௨-ம் நாள் (24–4–'53) வெள்ளிக்கிழமை தொடங்கி மூன்று நாட்கள் சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் **47-வது ஆண்டு நிறைவு விழாவும், சைவர் மாநாடும், சைவ இளைஞர் சைவ மாதர் மாநாடுகளும், திருக்குறள் மாநாடும்,** ஈரோடு, கோட்டைச் சிவாலயத்தில், அடுத்த பக்கங்களிற் காணும் நிகழ்ச்சிமுறைப்படி நடைபெறும்.

திருக்கைலாய பரம்பரை, திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடித் திருமடத்துத் தலைவர் **ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி-அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்,** சைவர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கவும், திருக்குறள் மாநாட்டைத் திறந்தருளவும் இசைந்துள்ளார்கள்.

சைவ இளைஞர் மாநாடு, **திருவாளர் - அ. ச. ஞானசம்பந்த முதலியார், M. A. அவர்கள்** (தமிழ் விரிவுரையாளர், சென்னை பச்சையப்பன் கல்லூரி) தலைமையிலும், சைவ மாதர் மாநாடு, தூத்துக்குடி - **திருமதி - C. E. V. ஈசுவரவடிவு அம்மையார்** தலைமையிலும் நடைபெறும்.

திருக்குறள் மாநாட்டிற்குச் சென்னை அரசாங்க நிதியமைச்சர் - **திருவாளர் - C. சுப்பிரமணியம், B.A., B.L., அவர்கள்** தலைமை தாங்க அன்புடன் இணங்கியுள்ளார்கள்.

தாங்கள் தங்கள் சபையினரோடும், உறவினரோடும், பிற அன்பர்களோடும் வந்திருந்து மாநாடுகளைச் சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

இங்ஙனம் :

க. அரங்கசாமி,	S. மீனாக்ஷிசுந்தர முதலியார், B.A., L.T.
சமாஜப்	சு. இராமசாமி செட்டியார்
பொதுச் செயலாளர்.	ஈ. மு. அண்ணாமலைப் பிள்ளை, B.A., B.L.
	ரா. ப. தங்கவேலு
	கு. சி. கந்தசாமி முதலியார்

நிகழ்ச்சி முறை

24–4–53 : வெள்ளிக்கிழமை : I சைவர் மாநாடு

தலைவர் : திருவண்ணாமலை ஆதீனம் - குன்றக்குடி - ஸ்ரீலஸ்ரீ - தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்

காலை	8—9	மணி	திருமுறைப் பாராயணம்.
	9—9-30	,,	தலைவரைப் பந்தலுக்கு அழைத்து வரல்.
	9-30—9-40	,,	கொடியேற்றல் : திரு. கி. இராமலிங்க முதலியார், M. A. (ஈரோடு நகராட்சி ஆணையாளர்).
	9-40—10	,,	திருக்கோயில் வழிபாடு.
	10—10-15	,,	வரவேற்புரை.
	10-15—10-30	,,	ஆண்டறிக்கை படித்தல்—சமாஜச் செயலாளர்.
	10-30—11-30	,,	தலைமைப் பேருரை.
பகல்	11-30—12-30	,,	சித்தாந்த கலாநிதி - வித்வான் - திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை (மதுரை தியாகராஜா கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்)—"ஞானவுரை"

[12-30—4-15 : உணவும் ஓய்வும்]

மாலை	4-15—4-45	,,	தமிழ்மறை ஓதல்.

மாலை	4-45—6	மணி	சித்தாந்த சிகாமணி - திரு. வச்சிரவேலு முதலியார், B.A., L.T. —"**சைவ சித்தாந்தமும் திருமுறைகளும்.**"
	6—7-15	,,	திரு. G. சுப்பிரமணிய பிள்ளை, M.A. (அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்)—"**தமிழ்மொழித் தலைவர்.**"
இரவு	7-15—8-15	,,	திரு. வீர.சா. மெய்யப்ப செட்டியார், B.A., B.L., (வழக்கறிஞர், தேவகோட்டை) —"**சைவத்தின் நிலைமையும் நமது கடமையும்.**"
	8-15—9-15	,,	தலைவர் கருத்துரை.

25–4–53 : சனிக்கிழமை

II சைவ இளைஞர் மாநாடு

தலைவர் : திரு. அ. ச. ஞானசம்பந்த முதலியார், M. A.
(பச்சையப்பன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், சென்னை)

காலை	8—8-30	மணி	தமிழ்மறைப் பாராயணம்.
	8-30—9	,,	வரவேற்புரை.
	9—9-30		குன்றக்குடி, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் ஆசியுரை.
	9-30—11	,,	தலைமை உரை.
	11—12	,,	புலவர்-திரு. முருகவேள், B.O.L. (தமிழாசிரியர், சென்னை) — "**சிவஞான முனிவரும் சைவ சித்தாந்தமும்.**"
பகல்	12—12-30	,,	திரு. ரா.சி. கதிர்வேலு, B.A., (ஈரோடு) —"**சைவ இளைஞர் கடமை.**"
	12-30—1	,,	தலைவர் கருத்துரை. நன்றிகூறல்.

[1—4-30 : உணவும் ஓய்வும்]

III சைவ சித்தாந்த மகா சமாஜக் கூட்டம்

மாலை	2-30—3-30	மணி	சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம்.
,,	3-30—4-30	,,	தொண்டர் ஆலோசனைக் கூட்டம்.

IV சைவ மாதர் மாநாடு

தலைவர்: திருமதி C.E.V. ஈசுவரவடிவு அம்மையார், தூத்துக்குடி

மாலை	4-30—5	மணி	தமிழ்மறைப் பாராயணம்.
	5—5-15	,,	வரவேற்புரை.
	5-15—6-30	,,	தலைமை உரை.

இரவு 6-30—7-45 மணி திருமதி ஞா. செண்பகம்மாள் (தென்காசி)
—"சைவம் வளர்த்த மங்கையர்கள்."

7-45—9 „ திருமதி புஷ்பம்நடராஜன்—"என்கடன்"

9—9-30 „ தலைவர் முடிவுரை. சமாஜம் நன்றி கூறல்.

26–4–53 : ஞாயிற்றுக்கிழமை

V ஈரோடு - ஏழாவது திருக்குறள் மாநாடு

தலைவர்: சென்னை அரசாங்க நிதியமைச்சர் -

திருவாளர் - C. சுப்பிரமணியம், B.A., B.L. அவர்கள்

காலை 9-30—9-45 மணி தமிழ்மறை ஓதல்.

9-45—10-30 „ மாநாட்டுத் திறப்புரை: குன்றக்குடி - ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள்.

10-30—11-30 „ தலைமை உரை.

11-30—12-30 „ வித்துவான் - திரு. கா. நயினர் முகம்மது (தமிழாசிரியர், உடுமலைப்பேட்டை)
—"இலக்கணத்திற்கு இலக்கியம்."

[12-30—4-30 : உணவும் ஓய்வும்]

மாலை 4-30—5 மணி தமிழ்மறை ஓதல்.

5—6-15 „ வித்துவான் - திரு. உலக ஊழியர் (தமிழாசிரியர், சேலம்)
—"திருவள்ளுவரின் தனித்தன்மை."

6-15—7-30 „ பெருஞ்சொல் விளக்கனூர்-திரு. அ. மு. சரவண முதலியார் (பூவாளூர்)
—"காமத்துப்பால்."

7-30—9 „ தலைவர் கருத்துரை.

9—9-15 „ நன்றி கூறல். கடவுள் வாழ்த்து.

குறிப்புகள் :—1. அவைக்களத்தில் பெண்மணிகட்குத் தனியிடமுண்டு. 2. தகுந்த காரணங்கட்காக நிகழ்ச்சி முறையைத் தலைவர் மாற்றலாம். 3. சமாஜ காரியக்கூட்டத்திற்கு, வாக்குரிமையுடைய அங்கத்தினர் மட்டும் வரலாம். 4. மாநாட்டுப் பந்தலில் சமாஜ வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும். 5. சமாஜ வெளியூர் அங்கத்தினர்கட்கு மட்டும், முதலிரண்டு நாள், உணவு இலவசமாக அளிக்கப்படும். மற்ற வெளியூரன்பர்கள், வரவேற்புக் கழகத்தார் விதிக்கும் சொற்ப கட்டணத்தைக் கழகத் துணைச்செயலாளர், திரு. ரா. ப. தங்கவேலு அவர்களிடம் செலுத்தி, தம் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

சாது அச்சுக்கூடம், சென்னை